

#MINORMATTERS

# இலங்கையில் மத சுதந்திரத்தின் நிலைப்பாடு தொடர்பான ஓர் மீளாய்வு

# இலங்கையில் மத சுதந்திரத்தின் நிலைப்பாடு தொடர்பான ஓர் மீளாய்வு

MinorMatters என்பது இலங்கையிலுள்ள சிறுபான்மை மதக் குழுக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ள ஒரு சுயாதீனமான அமைப்பாகும்

## MinorMatters உள்ளடக்கம்

அறிமுகம் 4

முறையியல் 5

கற்கை காலப்பகுதியில் தேசிய மட்டத்தில் இடம்பெற்ற பாரிய நிகழ்வுகள் 6

மதச் சுதந்திரம் தொடர்பில் ஏற்பாகின்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் 14

மத சுதந்திரம் மற்றும் அதற்கான சவால்கள் 21

பரிந்துரைகள் 46

பின்னிணைப்புக்கள் 50

# அறிமுகம்

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரமானது இலங்கையிலுள்ள அனைத்து பிரஜைகளுக்கும் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமையொன்றாகும் என்பதுடன் அது நாட்டிலுள்ள அனைத்து மத சமுதாயங்களுக்கும் சமமாக ஏற்பாகின்றது. எவ்வாறெனினும், கடைசி தசாப்தத்தில் இலங்கையில் மத சுதந்திரத்திற்கான மீறல்கள் இடம்பெற்ற போக்கினை நாம் கண்டதோடு, அவற்றுள் பல சந்தர்ப்பங்களில் மத சுதந்திரத்திற்கான மீறல்கள் வன்முறை வடிவினைப் பெற்றிருந்தன.

2021 இன் இறுதிப்பகுதியில், சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான ஐக்கிய அமெரிக்க ஆணைக்குழு (USCIRF) மற்றும் ஐக்கிய இராச்சியத்தைத் தழுவிய கிறிஸ்தவ அமைப்பொன்றான 'Christian Solidarity Worldwide' இனால் வெளியிடப்பட்ட அறிக்கைகள், சட்ட மற்றும் கொள்கை ரீதியான தடைகள் இலங்கையிலுள்ள குறிப்பிட்ட சில அடயாளப்படுத்தப்பட்ட சமுதாயங்களின் மத சுதந்திரத்தினை மட்டுப்படுத்துவதாக வெளிப்படுத்தியுள்ளன. இவ்விரு அறிக்கைகளும் மத சுதந்திரத்திற்கான மீறல்கள் தொடர்பான குறிப்பிட்ட எண்ணிக்கையிலானப் போக்குகளையும், சரியற்ற சட்ட நடைமுறைகளின் விளைவாக மேலதிக மீறல்கள் ஏற்படக்கூடியதற்கான அச்சுறுத்தலையும் குறிப்பிட்டு காட்டுகின்றன.[1]

மேலும், மார்ச் 2022 இல், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுவின் மத சுதந்திரம் தொடர்பான விசேட அறிக்கையிடுநரான Ahmed Shaheed இலங்கையில் முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மத சமுதாயங்களுக்கு எதிரான பாரபட்சம் தொடர்பாக அவதானத்தினை ஈர்த்திருந்தார்.[2] இதன்போது அவர் கிழக்கு மாகாண தொல்லியல் மரபுரிமை செயலணியின் தாபிப்பு, பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறுபான்மையிரை அச்சுறுத்தல் மற்றும் தடுத்து வைத்தல் போன்ற செயல்கள் மற்றும் கொவிட் 19 காரணமாக மரண சடங்குகள் மற்றும் அடக்கங்கள் மீதான மட்டுப்பாடுகள் என்பன மதச் சுதந்திரத்தினை மட்டுப்படுத்துவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

நாட்டில் காணப்படுகின்ற மத சுதந்திரம் தொடர்பான நிலைப்பாட்டினை புரிந்து கொள்வதானது, இலங்கையில் மத சுதந்திர மீறல்கள் தொடர்பாக இலக்கு வைக்கப்படுகின்ற மத சமுதாயங்கள்

[1] Thames, K., 2021. *Shrinking Space for Religious Minorities in Sri Lanka*. [online] The Diplomat. Available at: https://thediplomat.com/2021/10/shrinking-space-for-religious-minorities-in-sri-lanka/

[2] United Nations Human Rights Council. 2022. *A/HRC/49/44: Rights of persons belonging to religious or belief minorities in situations of conflict or insecurity - Report of the Special Rapporteur on freedom of religion or belief*. [online] Available at: https://www.ohchr.org/en/documents/thematic-reports/ahrc4944-rights-persons-belonging- religious-or-belief-minorities

யாவை என்பதனைக் கண்டறிவதற்கு, அவற்றின் மத சுதந்திரம் எவ்வாறு மீறப்படுகின்றது மற்றும் மத சுதந்திரத்தின் மீறலிற்கு வழிவகுக்கின்ற காரணிகள் யாவை என்பவற்றை அறிந்து கொள்வதற்கு மிக முக்கியமாகும். அதற்கமைய, இவ்வறிக்கையானது, முதலாவதாக 2018 இலிருந்து இலங்கையில் இடம்பெற்ற மத சுதந்திரத்தில் தாக்கம் செலுத்தக்கூடியவாறான அரசியல் விருத்திகள் மற்றும் மத சுதந்திரத்துடன் தொடர்புடைய சட்ட மற்றும் கொள்கைக் கட்டமைப்பு ஆகியவற்றை முன்வைப்பதனூடாக பின்னணி தொடர்பான ஓர் கண்ணோட்டத்தினை வழங்குகின்றது.

பின்னர் இவ்வறிக்கையானது 2018 இல் செய்யப்பட்டக் கற்கைகளிலிருந்து சேகரிக்கப்பட்ட அளவுசார் மற்றும் பண்புசார் இரண்டாம்நிலை தரவுகளினூடாக பிராந்திய மற்றும் தேசிய மட்டங்களில் இடம்பெறுகின்ற மத சுதந்திரத்திற்கான மீறல்களின் தன்மை குறித்து விளக்குகின்றது. அதன்பின்னர், அடையாளப்படுத்தப்பட்ட இடைவெளிகளைப் பூர்த்தி செய்வதற்கு இரண்டாம்நிலை தரவுகளைப் பயன்படுத்துகின்றது. மேலும், இவ்வறிக்கையின் முடிவில், இலகுவில் ஊறுபடத்தக்க மத சமுதாயங்கள் மேலதிக மீறல்களுக்கு உள்ளாகாது பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படக்கூடிய பொருத்தமான பரிந்துரைகளை முன்வைக்கின்றது.

வள மற்றும் நேர மட்டுப்பாடுகளுக்கு அமைவாக, இவ் அறிக்கையானது முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் இந்துக்கள் ஆகிய மூன்று மத குழுக்களை முன்னிலைப்படுத்தி ஆராய்ந்துள்ளது என்பதனை குறித்து கொள்தல் வேண்டும். இம்மூன்று மத சமுதாயங்களும் தங்களுடைய வெளிப்படுத்தலுக்கான சுதந்திரம் தொடர்பான தடைகளைக் கொண்டுள்ள மத சமுதாயங்களாக முன்னைய ஆய்வுகளினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

## முறையியல்

மேலே குறிப்பிடப்பட்டதற்கமைய இவ் ஆய்வின் பிரதான குறிக்கோள் இலங்கையில் மத சுதந்திரம் தொடர்பானதொரு புரிதலைப் பெற்றுக் கொள்தல் ஆகும். அந்நோக்கத்திற்காக, இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிஷேஷக ஐக்கியத்துவத்தின் தேவைப்பாட்டிற்கு அமைய, இக்கற்கையானது பாரியளவில் இரண்டாம்நிலை தரவுகளில் தங்கியிருக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, 2018 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து பெற்றுக் கொண்ட பண்புசார் மற்றும் அளவுசார் தரவுகள் இக்கற்கையிலே பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ் அறிக்கையினைத் தொகுப்பதற்காக, 2018 இலிருந்து செய்யப்பட்டுள்ள கற்கைகளின் அறிக்கைகள், இலங்கையில் மத சுதந்திரத்துடன் தொடர்புடைய சட்டக் கட்டமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய சமூக, கலாசார மற்றும் அரசியல் மேம்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், இக்கற்கையினை முன்னெடுத்து செல்கின்றபோது முதனிலைத் தரவுகளைச்

சேகரிக்க வேண்டியதன் தேவையினை ஆய்வுக்குழு உணர்ந்தது. இதற்கான பிரதான காரணங்களாக இரண்டாம்நிலைத் தரவுகளில் காணப்பட்ட சில இடைவெளிகளைப் பூர்த்தி செய்வதும், இப்பகுப்பாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ள இரண்டாம்நிலை தரவுகளின் பொருத்தப்பாட்டுத்தன்மையில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளினால் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதனைக் கண்டறிவதும் அமைந்திருந்தன.

ஆகவே, ஆய்வுக்குழுவானது குறிப்பிட்ட விடயப்பொருள் தொடர்பான உள்ளூர்மட்ட நிபுணர்களுடன் நேர்காணல்களை நடத்தியிருந்தது. இக்கற்கைக்கு தேவையான தரவுகள் கொழும்பு, நீர்கொழும்பு, நுவரெலியா, வவுனியா, மட்டக்களப்பு, மொணராகலை, கண்டி, புத்தளம், யாழ்ப்பாணம், குருணாகல் மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அரசாங்க உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக உள்ளூர் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள், சர்வமத சகவாழ்வு தொடர்பான உள்ளூர் நிபுணர்கள் ஆகியோருடன் நடத்தப்பட்ட 13 நேர்காணல்களிலிருந்து பெறப்பட்டது. நேர்காணலிற்கான பங்குபற்றுநர்களைத் தெரிவு செய்வதில் பல அம்சங்கள் கருத்திற் கொள்ளப்பட்டன. நேர்காணல் செய்யப்படுபவர்கள் கற்கையின் கீழ் அடங்குகின்ற மதக் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்களா, அவர்கள் மத சுதந்திரம் தொடர்பான சுதேசிய நடைமுறைகள் பற்றி பரீட்சயமுடையவராய் இருக்கின்றார்களா, கற்கை காலப்பகுதியின்போது அவர்களை இலகுவில் தொடர்பு கொள்ள முடியுமா, மற்றும் அவர்கள் செயற்படுகின்ற புவியியல் பரப்பு மத சுதந்திரம் மீதான மட்டுப்பாடுகள் குறித்து கவனம் ஈர்க்கப்பட்ட பிரதேசமாகக் காணப்படுகின்றதா போன்றன கவனத்திற் கொள்ளப்பட்ட அத்தகைய அம்சங்களாகும்.

## கற்கை காலப்பகுதியின்போது தேசிய மட்டத்தில் இடம்பெற்ற பாரிய நிகழ்ச்சிகள்

இவ் அத்தியாயமானது 2018 இலிருந்து 2022 இன் நடுப்பகுதி வரையிலான காலப்பகுதியில் இலங்கையில் மத சுதந்திரத்தினை பாதித்திருக்கக்கூடிய அரசியல் நிகழ்வுகள் தொடர்பான ஓர் கண்ணோட்டத்தினை வழங்குகின்றது.

| | | |
|---|---|---|
| 2018 | பெப்ரவரி 22 | அம்பாலை, கண்டியைச் சேர்ந்த சிங்கள லொறி சாரதியொருவர் கரலியத்தையில் நான்கு முஸ்லிம் இளைஞர்களால் தாக்கப்பட்டார்.[3] |

[3] *2018 Anti-Muslim Riots in Sri Lanka*. [online] Available at: https://en.wikipedia.org/wiki/2018_anti-Muslim_riots_in_Sri_Lanka

| | | |
|---|---|---|
| | பெப்ரவரி 27 | அம்பாறையில் அதிகாலையில் இடம்பெற்ற மோதலில் நான்கு கடைகளும் பள்ளிவாசலொன்றும் சேதமாக்கப்பட்டன. 3 பேரிற்கும் அதிகமானோர் இம்மோதலில் காயமடைந்ததாக அறிக்கையிடப்பட்டது.[4] |
| | மார்ச் 2 | பெப்ரவரி 22 தாக்குதலினால் அச்சிங்கள லொறி சாரதி மரணமடைந்ததனைத் தொடர்ந்து ஒரு குழுவினர் அத்தாக்குதலுக்கெதிராகப் போராட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் வாகன சக்கரங்களை பாதையில் போட்டு எரித்தனர். அதேநாளில் உடிஸ்பட்டுவையில் முஸ்லிம் கடைகளுக்கு எதிரான வன்முறை அறிக்கையிடப்பட்டது.[5] |
| | மார்ச் 5 | பாரிய எண்ணிக்கையிலான கிளர்ச்சியாளர்கள் திகன நகரத்தில் ஒன்று திரண்டதுடன் அப்பிரதேசத்திலிருந்த பள்ளிவாசல், கடைகள் மற்றும் வீடுகளுக்கு தீ வைத்தனர். காலையில் திகனயில் பரவிய இப்பதட்டநிலை ஏனைய பகுதிகளுக்கும் பரவியது.[6] |
| | மார்ச் 6 | கண்டி மாவட்டத்தில் ஏற்பட்ட முஸ்லிம்களுக்கு எதிரான கிளர்ச்சிக்கான பதிலிறுப்பாக அரசாங்கமானது நாட்டில் 10 நாட்களுக்கு அவசரகால நிலைமையினைப் பிரகடனப்படுத்தியதுடன், சமூக ஊடகங்களுக்கான அணுகலையும் மட்டுப்படுத்தியது. அத்துடன் 100 இற்கும் மேற்பட்ட நபர்கள் கட்டுக்காவலில் வைக்கப்பட்டனர்.[7] |
| | ஒக்ரோபர் 26 | ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னாள் ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷவினைப் பிரதமராக நியமித்ததுடன், நாட்டில் அரசியலமைப்பு நெருக்கடியொன்று தோற்றம் பெற்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வமாகப் பதவி நீக்கப்படுவதற்கு முன்னர் ஒரே நேரத்தில் இரு பிரதமர்கள் பதவி வகிப்பது போன்றதொரு தோற்ற நிலை ஏற்பட்டிருந்தது.[8] |
| | டிசெம்பர் 26 | கேகாலை மாவட்டத்திலுள்ள மாவனல்லை என்ற இடத்தில் புத்தர் சிலையொன்றினைத் தாக்கி ஊறு விளைவித்த சம்பவமொன்று பதிவாகியது.[9] |
| 2019 | ஏப்ரல் 21 | மூன்று தேவாலயங்கள் மற்றும் மூன்று ஐந்து நட்சத்திர ஹோட்டல்களை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் 269 தனிநபர்கள் கொல்லப்படுவதற்கும், 500 பேரளவில் காயமடைவதற்கும் காரணமாக அமைந்தன.[10] |

4 Ibid.
5 Ibid.
6 Ibid.
7 Ibid.
8 *2018 Sri Lankan Constitutional Crisis*. [online] Available at: https://en.wikipedia.org/wiki/2018_Sri_Lankan_constitutional_crisis#:~:text=A%20constitutional%20crisis%20began%20in,in%20two%20concurrent%20Prime%20Ministers.
9 Colombo Telegraph. 2018. *Several Buddha Statues Attacked In Mawanella: Police Arrest Two Suspects*. [online] Available at: https://www.colombotelegraph.com/index.php/several-buddha-statues-attacked-in-mawanella-police-arrest-two-suspects/
10 CNN. 2019. *Terror in Sri Lanka*. [online] Available at: https://edition.cnn.com/interactive/2019/04/world/sri-lanka-attacks/

| | | |
|---|---|---|
| | ஏப்ரல் 26 | முன்னாள் பாதுகாப்பு தலைமை அதிகாரி கோட்டாபய ராஜபக்ஷ இவ்வாண்டிற்கான ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடப் போவதாக அறிவித்தார்.[11] |
| | மே 14 | தேசிய தவ்ஹீட் ஜமாத் (NTJ), ஜமாதே மிலதே இப்ராஹிம் (JMI) மற்றும் விலயத் அஸ்-சேய்லனி *(WAS)*ஆகியவற்றைத் தடை செய்கின்ற விசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டார்.[12] |
| | மே 23 | பொதுபல சேனாவின் பொது செயலாளர் கலகொடத்தே ஞானசான தேரருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.[13] |
| | மே 25 | தீவிரவாத அமைப்பொன்றிற்காக நிதி சேகரித்தமை மற்றும் சிங்கள பெண்களுக்கு கட்டாய கருத்தடை சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டமை ஆகிய சந்தேகங்களின் பேரில் 42 வயதான வைத்தியர் சேகு ஷிஹாப்தீன் மொஹமட் சாபி குருணாகல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.[14] |
| | ஜுன் 4 | உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு பின்னர் சமூகத்தில் ஏற்பட்ட முஸ்லிம்களுக்கு எதிரான அச்சுறுத்தல்களுக்கு எதிரான கூட்டு எதிர்ப்பின் பகுதியொன்றாக நான்கு அமைச்சரவை அமைச்சர்கள் உள்ளடங்கலாக ஒன்பது அமைச்சர்கள் திங்கட்கிழமை இராஜினாமா செய்தார்கள்.[15] |
| | ஜுலை 26 | மே 25 அன்று கைது செய்யப்பட்ட முஸ்லிம் வைத்தியருக்கு பிணை வழங்கப்பட்டது.[16] |
| | ஆகஸ்ட் 21 | முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தினைத் திருத்துவதற்கான முன்மொழிவிற்கு அமைச்சரவை அனுமதியளித்தது. முஸ்லிம் மத விவகாரங்கள் மற்றும் கலாசார அமைச்சராக இருந்த அப்துல் ஹலீம் மற்றும் நீதி மற்றும் சிறைச்சாலை சீர்திருத்தங்கள் அமைச்சராக இருந்த தலதா அதுகோரல இம்முன்மொழிவினை முன்வைத்திருந்தனர்.[17] |

11 Reuters. 2019. *Exclusive: Sri Lankan ex-defense chief Gotabaya says he will run for president, tackle radical Islam*. [online] Available at: https://www.reuters.com/article/us-sri-lanka-blasts-gotabaya-exclusive-idUSKCN1S21UF .

12 The Economic Times. 2019. *Sri Lanka President bans NTJ, two other Islamist extremist organisations*. [online] Available at: https://economictimes.indiatimes.com/news/international/world-news/sri-lanka-president-bans-ntj- two-other-islamist-extremist-organisations/articleshow/69322882.cms?from=mdr

13 Daily FT. 2019. *President pardons Gnanasara Thero*. [online] Available at: https://www.ft.lk/Front-Page/President-pardons-Gnanasara-Thero/44-678714

14 NDTV. 2019. *Doctor Arrested For "Sterilising" Women In Sri Lanka Was Framed: Probe*. [online] Available at: https://www.ndtv.com/world-news/doctor-arrested-for-sterilising-women-in-sri-lanka-was-framed-probe-2064837

15 New York Times. 2019. *All 9 of Sri Lanka's Muslim Ministers Resign, as Bombing Backlash Intensifies*. [online] Available at: https://www.nytimes.com/2019/06/03/world/asia/sri-lanka-muslim-ministers-resign.html

16 Aneez, S., 2019. *Sri Lanka court grants bail for doctor accused of sterilizing Buddhist women*. [online] Available at: https://www.reuters.com/article/us-sri-lanka-doctor-idUSKCN1UK2SN .

17 The Morning - Sri Lanka News. 2019. *Cabinet nod for MMDA reforms*. [online] Available at: http://www.themorning.lk/cabinet-nod-for-mmda-reforms/

| | | |
|---|---|---|
| | ஒக்ரோபர் 25 | ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் "Vistas of Prosperity and Splendor" எனத் தலைப்பிடப்பட்ட தனது தேர்தல் விஞ்ஞாபனத்தினை முன்வைத்தார். இது பொருளாதார அபிவிருத்தி, தேசிய பாதுகாப்பு மற்றும் 'ஒரு நாடு-ஒரே சட்டம்' ஆகிய விடயங்களை முன்னிலைப்படுத்தியிருந்தது. [18] |
| | நவம்பர் 16 | ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது.[19] |
| | நவம்பர் 17 | கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுகின்றார்.[20] |
| | நவம்பர் 18 | அனுராதபுரவிலுள்ள ருவன்வெலி தூபத்திற்கருகில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையின் 7வது நிறைவேற்று ஜனாதிபதியாகப் பதவி பிரமாணம் செய்து கொண்டார்.[21] |
| 2020 | மார்ச் 27 | சங்க சபா ஏகமனதாக இணங்குமாயின் பாராளுமன்ற தேர்தல்களுக்கு பின்னர் மதமாற்றத்திற்கு எதிரான சட்டமூலத்தினை முன்வைக்க முடியுமென இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்தார்.[22] |
| | ஏப்ரல் 12 | நாட்டிலுள்ள முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் எதிர்ப்புக்களைப் பொருட்படுத்தாது அரசாங்கமானது கொவிட்-19 இனால் இறந்தவர்களை கட்டாயத் தகனத்திற்கு உள்ளாக்குகின்ற வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டது.[23] |
| | ஜுன் 2 | இலங்கை ஜனாதிபதி விசேட வர்த்தமானி அறிவித்தலொன்றினூடாக கிழக்கு மாகாணத்திலுள்ள தொல்லியல் மரபுகளை முகாமை செய்வதற்கான ஜனாதிபதி செயலணியொன்றைத் தாபித்தார்.[24] |
| | ஆகஸ்ட் 5 | 16 ஆவது பாராளுமன்றத்திற்கான 225 பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான பாராளுமன்றத் தேர்தல்கள் ஆகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெற்றது.[25] |

[18] Colombo Gazette. 2019. *Gotabaya releases manifesto giving priority to economy, security*. [online] Available at: https://colombogazette.com/2019/10/25/gotabaya-releases-manifesto-giving-priority-to-economy-security/

[19] *2019 Sri Lankan Presidential Election*. [online] Available at: https://en.wikipedia.org/wiki/2019_Sri_Lankan_presidential_election

[20] Ibid.

[21] Ibid.

[22] New Europe. 2020. *Sri Lankan PM promises to introduce new anti-conversion bill to protect Buddhists*. [online] Available at: https://www.neweurope.eu/article/sri-lankan-pm-promises-to-introduce-new-anti-conversion-bill-to- protect-buddhists/

[23] The Times of India. 2020. *Sri Lanka makes cremation compulsory for Covid-19 deaths*. [online] Available at: https://timesofindia.indiatimes.com/world/south-asia/sri-lanka-makes-cremation-compulsory-for-covid-19-deaths/articleshow/75109273.cms

[24] Tamil Guardian. 2020. *All Sinhala task force for Sri Lanka's 'archaeology' in East*. [online] Available at: https://www.tamilguardian.com/content/all-sinhala-task-force-sri-lanka%E2%80%99s-%E2%80%98archaeology%E2%80%99-east

[25] Wikipedia. 2020. *2020 Sri Lankan Parliamentary Election*. [online] Available at: https://en.wikipedia.org/wiki/2020_Sri_Lankan_parliamentary_election

| | | |
|---|---|---|
| | செப்ரம்பர் 8 | ஆளுங்கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவானது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இறைச்சிக்காக மாடுகளைக் கொல்லுதல் தடை செய்யப்படுமென முன்மொழிந்துள்ளதாக அறிவித்தது.[26] |
| | ஒக்ரோபர் 22 | அரசியலமைப்புக்கான 20 வது திருத்தமானது பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேறியது.[27] |
| 2021 | ஜனவரி 27 | ஐக்கிய நாடுகள் சபையினால் புதன்கிழமையன்று வெளியிடப்பட்ட புதிய அறிக்கையானது இலங்கை கடந்தகால மீறல்களைக் கையாளத் தவறியுள்ளதுடன் மனித உரிமை மீறல்கள் எதிர்காலத்தில் இடம்பெறுவதற்கான அபாயங்கள் குறிப்பிட்டத்தக்களவில் அதிகரித்துவருவதாகவும் கூறியிருந்தது. இவ் அறிக்கையானது சட்டத்தினால் தண்டிக்கப்படுகின்றவர்களை விடுதலை செய்கின்றமை, அரச செயற்பாடுகளில் இராணுவமயமாக்கம் அதிகரித்துள்ளமை, தேசிய இனவாதம், போலியான தகவல்கள் மற்றும் சிவில் சமூகங்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் போன்ற போக்குகள் இவ்வருடம் முழுவதிலும் இடம்பெற்றமையை சுட்டிக் காட்டியது.[28] |
| | பெப்ரவரி 3 | கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை மாவட்டத்திலிருந்து வட மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம் வரையிலான நடை பயணம் - "பொத்துவிலிலிருந்து பொலிகண்டி வரை"என அறியப்பட்டது- முன்னெடுக்கப்பட்டது. பிரபல்யமான தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள், மாணவர்கள் மற்றும் பிரதேசவாசிகள் இதில் கலந்து கொண்டனர். தமிழ் பிரதேசங்களில் இடம்பெறுகின்ற காணி ஆக்கிரமிப்புக்கள், 'அரசினால் அனுசரனையளிக்கப்படுகின்ற' சிங்கள குடியேற்றங்கள், வலுக்கட்டாயமான காணாமலாக்கப்படுதல்கள், இராணுவமயமாக்கம், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என்போருக்கெதிரான அச்சுறுத்தல்கள், பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் தொடர்ச்சியான பிரயோகம் மற்றும் விளக்கத்திற்கு உட்படுத்தாது அரசியற் கைதிகளைத் தொடர்ச்சியாக அடைத்து வைத்திருத்தல் ஆகிய விடயங்கள் தொடர்பான கோரிக்கைகளை இவ் ஆர்ப்பாட்டம் உள்ளடக்கியிருந்தது. மேலும், இச்செயற்பாட்டாளர்கள் முஸ்லிம்களைப் பாதிக்கின்ற கட்டாயத் தகனக் கொள்கையினை மாற்றுமாறும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தினை உறுதி செய்யுமாறும் கோரியிருந்தனர்.[29] |

[26] TRT World. 2020. *Why is Sri Lanka planning to ban cattle slaughter?*. [online] Available at: https://www.trtworld.com/magazine/why-is-sri-lanka-planning-to-ban-cattle-slaughter-39643

[27] Parliament of Sri Lanka – News. 2020. *"20th Amendment to the Constitution" passed in Parliament*. [online] Available at: https://www.parliament.lk/news-en/view/1943

[28] United Nations Human Rights – Office of the High Commisioner for Human Rights. 2021. [online] Available at: https://www.ohchr.org/en/press-releases/2021/01/sri-lanka-alarming-path-towards-recurrence-grave-human-rights-violations-un

[29] The Hindu. 2021. *Analysis | A long march in Sri Lanka — to register protest, forge a new alliance*. [online] Available at: https://www.thehindu.com/news/international/a-long-march-in-sri-lanka-to-register-protest-forge-a- new-alliance/article33792547.ece

| | | |
|---|---|---|
| | பெப்ரவரி 14 | திரிபுரா முதல்வர் பிப்லாப் தேவ் இந்தியாவின் பாரதிய ஜனதா கட்சியினை நேபாள் மற்றும் இலங்கை அரசாங்கங்களில் தாபிப்பதற்கானத் திட்டங்களை Amit Shah கொண்டுள்ளதாக அறிக்கையொன்றினை வெளியிட்டார்.[30] |
| | பெப்ரவரி 18 | பௌத்த சாசனம், மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சானது மதமாற்றத்திற்கெதிரான சட்டக் கட்டமைப்பொன்று வரையப்பட்டுள்ளதாகக் கூறியது.[31] |
| | பெப்ரவரி 26 | இலங்கை கொவிட்-19 இனால் மரணித்தவர்களை அடக்கம் செய்ய அல்லது தகனம் செய்வதற்கு அனுமதிக்கின்ற வகையில் அதன் கட்டாயத் தகனக் கொள்கையினைத் திருத்தியது.[32] |
| | மார்ச் 13 | மனித உரிமைகள் பாதுகாவலர்களால் 'கொடூரமான சட்டமாக'அழைக்கப்படுகின்ற சர்ச்சைக்குரிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது எதிர்காலத்தில் மத தீவிரவாதத்தினைக் கையாளும் பொருட்டு சந்தேகநபர்களைத் தடுத்து வைப்பதற்காகப் பரந்தளவான அதிகாரங்களுடன் பயன்படுத்தப்படுமென பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரான சரத் வீரசேகர கூறினார். அத்துடன் புர்காவினைத் தடை செய்வதற்கான மற்றும் இலங்கையிலுள்ள பதிவு செய்யப்படாத மதராஸாக்களை மூடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் கூறினார்.[33] |
| | மார்ச் 23 | இலங்கைக்கெதிரான ஐக்கிய நாடுகள் சபை தீர்மானமானது பிரதானமாக, 'அரசாங்க செயற்பாடுகளில் அதிகரித்துள்ள இராணுவமயமாக்கம், நீதித்துறையின் சுயாதீனத்தன்மை அழிக்கப்பட்டுள்ளமை மற்றும் தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினருக்கெதிரான ஓரங்கட்டல்கள் அதிகரித்துள்ளமை'போன்ற நாடு முழுவதிலும் வியாபித்துள்ள பிரச்சினைகளை அடிக்கோடிட்டு காட்டியது. அத்துடன், கொவிட் 19 இனால் மரணமடைந்த முஸ்லிம் மற்றும் வேறு மதங்களைச் சேர்ந்த உறுப்பினர்களது அடக்கம் செய்யப்படுவதற்கான மத உரிமை மறுக்கப்பட்டமை தொடர்பிலும் தனது அவதானத்தினை செலுத்தியிருந்தது.[34] |
| | ஒக்ரோபர் 27 | இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 'ஒரு நாடு மற்றும் ஒரு சட்டம்' என்ற கருத்தேற்பினை தாபித்து அதற்கான வரைவு சட்டமூலமொன்றினை ஆக்குவதற்காக 13 |

[30] The Wire. 2021. *'Amit Shah Has Plans to Form BJP Govts in Nepal, Sri Lanka': Tripura CM Biplab Deb*. [online] Available at: https://thewire.in/politics/amit-shah-has-plans-to-form-bjp-govts-in-nepal-sri-lanka-tripura-cm-biplab-deb

[31] Fonseka, R., 2021. *New laws against unethical conversions*. [online] The Morning - Sri Lanka News. Available at: http://www.themorning.lk/new-laws-against-unethical-conversions/

[32] BBC News. 2021. *Covid-19: Sri Lanka reverses 'anti-Muslim' cremation order*. [online] Available at: https://www.bbc.com/news/world-asia-56205737 .

[33] Srinivasan, M., 2021. Sri Lanka announces burqa ban, to shut 1,000 madrasas. [online] The Hindu. Available at: https://www.thehindu.com/news/international/sri-lanka-to-ban-burqa-shut-many-islamic-schools-minister/article34061652.ece

[34] UN News. 2021. *Human Rights Council strengthens rights office probe into Sri Lanka's long civil war*. [online] Available at: https://news.un.org/en/story/2021/03/1088122

| | | |
|---|---|---|
| | | உறுப்பினர்களைக் கொண்ட செயலணியொன்றினைத் தாபித்தார்.[35] |
| 2022 | பெப்ரவரி 25 | ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகரின் அறிக்கையானது நாட்டில் மனித உரிமைகளின் நிலைப்பாடு சீர்குலைந்துள்ளதாகவும் அதனைத் தடுப்பதற்கு அரசாங்கம் எவ்வித முறையான பொறிமுறையினையும் மேற்கொள்ளவில்லை என்றும் கூறியது.[36] |
| | மார்ச் 8 | உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மிகப்பெரிய அரசியல் சதியின் பகுதியொன்றாகுமென கர்தினால் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கூறினார்.[37] |
| | மார்ச் | பொருளாதார நெருக்கடிக்கு பதிலிறுக்கும் முகமாக கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் இலங்கை முழுவதிலும் நடத்தப்பட்டன.[38] |
| | ஏப்ரல் 30 | மஹா சங்கவானது உடனடியாக அமைச்சரவையிலிருந்து விலகுமாறு அல்லது விளைவுகளுக்கு முகங்கொடுக்குமாறு பிரதமர், ஆளுங்கட்சியின் அங்கத்தவர்கள், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஆகியோருக்கு இறுதி அறிவிப்பு வழங்கியிருந்தது. அத்துடன், மஹா சங்கவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அரசியல் கட்சிகளிடமிருந்து ஆதரவு கோரி அறிக்கையொன்றினை வெளியிட்டிருந்தனர்.[39] |
| | மே 6 | நாடளாவியரீதியிலான ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்தமையினால் ஜனாதிபதி அவசரகால நிலைமையினை பிரகடனம் செய்தார்.[40] |
| | மே 9 | பொது மக்களின் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் நாட்டில் நிலவுகின்ற பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியினால் மக்கள் திருப்தியற்றிருப்பதனை குறித்து நாடு முழுவதிலும் இடம்பெற்ற வன்முறை என்பனவற்றுக்கு மத்தியில் மஹிந்த ராஜபக்ஷ தனது பிரதமர் பதவியினை இராஜினாமா செய்தார்.[41] |

[35] Crisis Group. 2021. *"One Country, One Law": The Sri Lankan State's Hostility toward Muslims Grows Deeper*. [online] Available at: https://www.crisisgroup.org/asia/south-asia/sri-lanka/%E2%80%9Cone-country-one-law%E2%80%9D-sri-lankan-states-hostility-toward-muslims-grows-deeper

[36] Human Rights Watch. 2022. *Sri Lanka: UN Report Describes Alarming Rights Situation*. [online] Available at: https://www.hrw.org/news/2022/03/03/sri-lanka-un-report-describes-alarming-rights-situation#:~:text=The%20report%2C%20issued%20on%20February,past%20abuses%20has%20been%20blocked.

[37] The Hindu. 2022. Easter attacks was a 'grand political plot', Sri Lanka cardinal tells UNHRC. [online] Available at: https://www.thehindu.com/news/international/easter-attacks-was-a-grand-political-plot-sri-lanka-cardinal-tells- unhrc/article65201574.ece

[38] Reuters. 2022. *Protests flare in crisis-hit Sri Lanka as govt readies for IMF talks*. [online] Available at: https://www.reuters.com/world/asia-pacific/sri-lanka-begin-official-talks-with-imf-next-month-protests-grow- 2022-03-15/

[39] Business Standard. 2022. *Sri Lanka's powerful Buddhist clergy threatens to issue anti-govt decree*. [online] Available at: https://www.business-standard.com/article/international/sri-lanka-s-powerful-buddhist-clergy- threatens-to-issue-anti-govt-decree-122043000368_1.html

[40] Wikipedia. 2022. *2022 Sri Lankan Protests*. [online] Available at: https://en.wikipedia.org/wiki/2022_Sri_Lankan_protests#March

[41] Ibid.

| | | |
|---|---|---|
| | மே 12 | ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி பிரமானம் செய்து கொண்டார்.[42] |

[42] Ibid.

## மத சுதந்திரம் தொடர்பில் ஏற்பாகின்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள்

இவ் அத்தியாயமானது இலங்கையிலுள்ள வேறுபட்ட மத சமுதாயங்களின் மத சுதந்திரத்தினை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோப் பாதிக்கக்கக்கூடிய அண்மை காலங்களில் இயற்றப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பான மீளாய்வொன்றினை வழங்குகின்றது. இவ் அத்தியாயமானது தற்போது நடைமுறையிலிருக்கின்ற சட்டவாக்கங்களை மட்டுமல்லாது, மத சுதந்திரத்தினை மட்டுப்படுத்துகின்ற முன்மொழியப்பட்டுள்ள சட்டங்கள், ஒழுங்குவிதிகள், சுற்றுநிருபங்கள், அரச நடைமுறைகள் மற்றும் வர்த்தமானிகளையும் ஆராய்கின்றது.

### அரசியலமைப்பு ஏற்பாடுகள்

மதத்துடன் தொடர்புடைய அரசியலமைப்பு ஏற்பாடுகள் உறுப்புரைகள், 9, 10, 12 மற்றும் 14(1)(உ) ஆகியவற்றில் காணப்படுகின்றன. உறுப்புரை 9 ஆனது பௌத்தத்திற்கு முதன்மை ஸ்தானத்தினை வழங்கியுள்ளதுடன் பௌத்த மதத்தினைப் பாதுகாக்க வேண்டிய மற்றும் வளர்க்க வேண்டிய அரசின் பொறுப்பினை உறுதிப்படுத்துகின்றது. அத்துடன் உறுப்புரை 9 ஆனது உறுப்புரைகள், 9, 10, 12 மற்றும் 14(1)(உ) ஆகியவற்றில் காணப்படுகின்ற உரிமைகளை அனைத்து மதங்களுக்கும் உத்தரவாதப்படுத்துகின்றது.

அரசியலமைப்பின் உறுப்புரை 10 ஆனது, 'ஒருவர் மதம் அல்லது நம்பிக்கையொன்றினை தனது சொந்தத் தெரிவில் கொண்டிருப்பதற்கான அல்லது தழுவிக் கொள்வதற்கான சுதந்திரம் உள்ளடங்கலாக சிந்தனை, மனசாட்சி மற்றும் மதத்திற்கான சுதந்திரத்தினை' பிரஜைகளுக்கு வழங்குகின்றது. அத்துடன் இது பிரஜைகளுக்கான மீறப்பட முடியாத முழுமையான உரிமையாகக் காணப்படுகின்றது. உறுப்புரை 14(1)(உ) ஆனது, தாமாகவோ அல்லது பிறருடன் இணைந்தோ, பகிரங்கமாக அல்லது தனிப்பட்டரீதியில் தங்களுடைய மதத்தை அல்லது வழிபாட்டினை அல்லது சேவைகளை வெளிப்படுத்துவதற்கு அல்லது நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான சுதந்திரத்தினை பிரஜைகளுக்கு வழங்குகின்றது. எவ்வாறெனினும், உறுப்புரை 14(1)(உ) ஆனது உறுப்புரை 15(7) இன் கீழ் விதிக்கப்பட்டுள்ள சில மட்டுப்பாடுகளுக்கு அமைவானது ஆகும். அத்தகைய மட்டுப்பாடுகள் தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு மற்றும் பொது சுகாதாரம் அல்லது ஒழுக்கத்தினைப் பாதுகாப்பதற்காக இருக்கலாம் அல்லது ஏனையோரின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கான தோதான அங்கீகாரம் மற்றும் மரியாதையினைப் பெற்றுக் கொள்கின்ற நோக்கத்திற்கானதாக இருக்கலாம் அல்லது ஜனநாயக சமூகமொன்றின் நியாயமான பொதுநல அக்கறைகளைப் பூர்த்தி செய்வதற்கானதாக இருக்கலாம்.

குணதிலக்க (2015) இன் கருத்துப்படி, இலங்கையின் பரந்தளவான அரசியலமைப்பு

*கட்டமைப்பானது மத சுதந்திரத்தினை உத்தரவாதப்படுத்துகின்ற அதேவேளை, அச்சுதந்திரத்தின் வெளிப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள் குறித்து சற்று குழப்பமான நிலையினையே கொண்டுள்ளது. உதாரணமாக, சில அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள பொருட்கோடல்களுக்கு அமைய, மதப்பரப்புரைக்கான உரிமையானது இலங்கையில் அனைத்து மதங்களுக்கும் சமமாக வழங்கப்பட்டுள்ள சம உரிமையொன்றல்ல.*[43] *மேலும், பௌத்த மதத்திற்கு தெளிவான முன்னுரிமையொன்றினை வழங்கியுள்ளதனூடாக அரசியலமைப்பானது "வேறு" என்ற வகைப்பாட்டினைத் தோற்றுவித்திருப்பதாக சில அறிஞர்கள் கருதுகின்றனர்.*[44] *அத்தகைய வேறுபாட்டினை உருவாக்குகின்றமையானது பாரபட்சத்திற்கு உள்ளாக்குவதற்கான சாத்தியப்பாட்டினைக் கொண்டுள்ளதுடன் பன்மைத்துவ சமூகமொன்றில் இருக்க வேண்டிய சமத்துவம் பற்றிய அடிப்படைக் கோட்பாட்டை மழுங்கடிக்கச் செய்கின்றது.*[45]

## சர்வதேச சட்டம்

*சர்வதேச பரப்பில், இலங்கை அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் உள்ளடங்கலாக மத சுதந்திரத்தினை அங்கீகரிக்கின்ற பல சர்வதேச ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தின் உறுப்புரை 18 ஆனது ஒவ்வொருவருக்கும் சிந்தனை, மனசாட்சி மற்றும் மதத்திற்கான உரிமை உண்டு என கூறுகின்றது. அதேபோல, குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 18 ஆனது மத சுதந்திரம் என்பது ஒருவர் தன்னுடைய தெரிவில் மதம் அல்லது நம்பிக்கையொன்றினைக் கொண்டிருப்பதற்கான அல்லது தழுவிக்கொள்வதற்கான சுதந்திரம், மற்றும் அவருடைய மதத்தினை தனிப்பட்டரீதியில் அல்லது ஏனையோருடன் இணைந்து சமுதாயத்தில், பகிரங்கமாக அல்லது தனியாக வழிபடுவதற்கான, பின்பற்றுவதற்கான மற்றும் போதிப்பதற்கான அல்லது நம்புவதற்கான சுதந்திரத்தினை உள்ளடக்கும் என கூறுகின்றது.*

*மேலும், குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாய சட்டத்தின் உறுப்புரை 20(2) ஆனது பாரபட்சம், விரோதம் அல்லது வன்முறைக்கான தூண்டுதலை உள்ளடக்குகின்ற தேசிய, இன அல்லது மத வெறுப்பு நியாயப் பிரசாரங்கள் சட்டத்தினால் தடை செய்யப்பட்டுள்ளது என கூறுகின்றது. இலங்கை அத்தகைய ஒப்பந்தங்களுக்கு சர்வதேச மட்டத்தில் கைச்சாத்திட்டுள்ள தரப்பாக ஆகியுள்ளமையினால், அது மத சுதந்திரத்தினைப் பாதுகாப்பதற்கு, மேம்படுத்துவதற்கு மற்றும் பூர்த்தி செய்வதற்கு கடப்பாடுடையதாகும்.*

## இனக்குழுக்களுக்கு பிரத்தியேகமான சட்டங்கள்

[43] Gunatilleke, G., 2015. *The Chronic and the Acute Post War Religious Violence in Sri-Lanka*. [online] International Centre for Ethnic Studies. Available at: https://ices.lk/wp-content/uploads/2016/01/The-Chronic-and-the-Acute- Post-War-Religious-Violence-in-Sri-Lanka.pdf

[44] Welikala, A., 2013. *The Sri Lankan Republic at 40*. Colombo, Sri Lanka: Centre for Policy Alternatives (CPA).

[45] Ibid.

இங்கு, விவாகரத்து, பிள்ளைகளின் கட்டுக்காவல் மற்றும் ஆதன மரபுரிமை உள்ளடங்கலான குடும்ப/சிவில் விவகாரங்கள் குறிப்பிட்ட இன அல்லது மதக்குழுவிற்கான வழக்காற்று சட்டங்கள் அல்லது நாட்டின் சிவில் சட்டத்தின்கீழ் தீர்க்கப்படுகின்றன. 1951 ஆம் ஆண்டு முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்திற்கமைய, இஸ்லாமிய விசேட சட்டமானது முஸ்லிம் திருமணங்கள் மற்றும் விவாகரத்துக்களை ஆளுகை செய்கின்ற அதேவேளை, பெரும்பாலான ஆதன உரிமைகள் தொடர்பில் சிவில் சட்டம் ஏற்புடையதாகின்றது. வட மாகாணத்தில் சிவில் சட்டம் திருமணம் தொடர்பான விடயங்களை ஆளுகை செய்கின்ற அதேவேளை, தேசவழமைச் சட்டம் (தமிழ் வழக்காற்று சட்டம்) ஆதனம் தொடர்பான விடயங்களைக் கையாள்கின்றது. சில சிங்களவர்களின் (காலணித்துவ கண்டி இராச்சிய பாரம்பரியங்களின் அடிப்படையில்) வாரிசுரிமை மற்றும் சாதி முறைமையின் தொழிற்பாடு போன்றன தொடர்பான சிவில் விடயங்களை கண்டியச் சட்டம் ஆளுகை செய்கின்றது.[46]

## பயங்கரவாதத் தடுப்பு சட்டம்

பயங்கரவாதத் தடுப்பு சட்டமானது சமூகத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கக்கூடிய வகையிலான ஏதேனும் நடைமுறைகளை ஊக்குவிக்கின்ற அல்லது அவற்றிற்கு ஆதரவளிக்கின்ற ஏதேனும் குழு, தனிநபர்கள் அல்லது அமைப்புக்களை கையாள்கின்ற நோக்கத்துடன் இலங்கையில் 1979 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இது தற்காலிக சட்டவாக்கமொன்றாகவே அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பிரதான குறிக்கோள் நாட்டில் பலவந்தப்படுத்தல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு அவசியமான பின்புலத்தினைத் தயார்ப்படுத்துவதே ஆகும்.[47] வரலாற்றுரீதியாக, பயங்கரவாதத் தடுப்பு சட்டமானது மூன்று தேசிய அவசரகால நிலைமைகளின்போது அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.[48] உதாரணமாக, 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் பயங்கரவாதத் தடுப்பு சட்டம் பயன்படுத்தப்பட்டது. அப்போதிருந்து இது தொடர்பாக பரந்தளவான விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. இதற்கான காரணம் இச்சட்டத்தின் எதேச்சாதிகாரமான பிரயோகம் மட்டுமல்ல, மாறாக, இலக்கு வைக்கப்பட்ட மத சிறுபான்மையினருக்கெதிரான மனித உரிமை மீறல்களும் விசேடமாக, அரசியலமைப்பினால் பாதுகாக்கப்பட்டுள்ள சிறுபான்மையினரின் மத, நம்பிக்கை மற்றும் வழிபாட்டிற்கான சுதந்திரத்தின் மீறல்களும் இதற்கான காரணமாகும்,

---

46 *Sri Lanka 2020 International Religious Freedom Report*. [online] Available at: https://lk.usembassy.gov/wp-content/uploads/sites/149/2020-INTERNATIONAL-RELIGIOUS-FREEDOM-REPORT-SRI-LANKA.pdf

47 Tegal, E., 2020. *Understanding Rule of Law, Human Security and Prevention Of Terrorism in Sri Lanka*. [online] Available at: https://lstlanka.org/images/publications/reports/2021/Understanding_Rule_of_Law_Human_Security_and_Prevention_of_Terrorism_in_Sri_Lanka_English.pdf

48 Manoharan, N., 2006. *Counterterrorism Legislation in Sri Lanka: Evaluating Efficacy*. [online] Available at: https://www.eastwestcenter.org/publications/counterterrorism-legislation-sri-lanka-evaluating-efficacy

## மத மாற்றத்திற்கெதிரான சட்டமூலம்

மத மாற்றத்திற்கு எதிரான சட்டமூலத்தினை உருவாக்குவதற்கான பின்புலமானது தசாப்த காலத்திற்கும் மேலாக அவ்வப்போது அடிக்கோடிட்டு காட்டப்பட்டு வருகின்றது. 2009 இல், ஜாதிக ஹெல உருமய கட்சியானது மக்களை வேறுபட்ட மதங்களுக்கு நெறிமுறையற்றரீதியில் மாற்றுவதற்கு எதிரான சட்டமூலமொன்றினை முன்மொழிந்திருந்தது.[49] கட்டாயப்படுத்தப்பட்ட மதமாற்றத்தினை நிறுத்துதல் அல்லது மக்களை மதம் மாற்றுவதற்கு பொருளாதார நன்மைகளை அளிப்பதனை நிறுத்துதல் என்பன அவர்களின் வாதமாக அமைந்திருந்தது. எவ்வாறெனினும், 2004 இல் அத்தகைய சட்டமூலமொன்று முன்மொழியப்பட்டபோது, அத்தகைய சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது என உச்ச நீதிமன்றம் கருதியது. அச்சட்டமூலமானது புரட்டஸ்தாந்து மற்றும் கத்தோலிக்க குழுக்களின் கண்டனத்திற்கு உள்ளானது.[50] 2021 இன் முதற் பாதியில், பௌத்த சாசன அமைச்சானது நாட்டில் மக்களை வேறுபட்ட மதங்களுக்கு ஒழுக்கரீதியற்ற முறையில் மாற்றுவதற்கெதிரான சட்டக் கட்டமைப்பொன்று உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டிய தேவையொன்று உள்ளது என்பதனை சுட்டிக்காட்டி அத்தகைய சட்டமூலமொன்றினை வரைந்தது.[51] எவ்வாறெனினும், அது நடைமுறைப்படுத்தத்தக்க சட்ட ஏற்பாடு அல்ல. எவ்வாறெனினும், அத்தகைய சட்டங்களை இயற்றுகின்றபோது தன்னிச்சையான மத மாற்றம் (தனது தனிப்பட்ட தெரிவின் அடிப்படையில் மதம் மாறுதல்) மற்றும் பலவந்தப்படுத்தலினூடான மத மாற்றம் என்பவற்றை வேறுபடுத்துவது அவசியம் என சட்ட அறிஞர்கள் வாதிடுகின்றனர்.[52] இதற்கு மேலதிகமாக, நீதிமன்றங்கள் உறுப்புரை 14(1)(உ) இன் கீழான 'மத வெளிப்படுத்துகையினை' உண்மையான சுவிஷேஷகமாக அங்கீகரிக்கின்ற அதேவேளை, அவை முறையற்ற மத மாற்றங்களை அங்கீகரிப்பதில்லை.

## ஒரு நாடு- ஒரு சட்டம் செயலணி

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தின்போது ஒரு நாடு- ஒரு சட்டம் என்ற கருத்தேற்பினை அறிமுகப்படுத்தினார். 2021 ஒக்ரோபர் மாதம், ஒரு நாடு- ஒரு சட்டக் கட்டமைப்பினை வரைவதற்காக விசேட ஜனாதிபதி செயலணியொன்று நியமிக்கப்பட்டது. மேலே சொல்லப்பட்ட மூன்று இன சமுதாயங்களினாலும் பிரத்தியேகமாக மற்றும் முதன்மையானதாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்ற வழக்காற்று உரிமைகளை இல்லாதொழிப்பதும் அடையாளப்படுத்தப்பட்ட ஆலோசனைகளில் ஒன்றாகும். ஒரு நாடு- ஒரு சட்டம் என்ற கருத்தேற்பினை அறிமுகப்படுத்துவதற்கான திட்டமானது நாட்டிலுள்ள இன

49 Perera, M., 2009. *Anti-conversion bill: minorities fear restrictions on religious freedom*. [online] Available at: https://www.asianews.it/news-en/Anti-conversion-bill:-minorities-fear-restrictions-on-religious-freedom- 14360.html

50 Ibid.

51 Liyanapathirana, N., 2021. *New laws against unethical conversions*. [online] Available at: https://www.themorning.lk/new-laws-against-unethical-conversions/

52 Ibid.

மற்றும் மத சமுதாயங்களின் வேறுபட்ட கலாசார நடைமுறைகளின் நுட்பங்களை ஆராய வேண்டிய தேவையினைக் கவனத்திற் கொள்ளவில்லை. இச்செயலணியின் தலைமைத்துவம் தொடர்பிலேயே அதிக கவனம் ஈர்க்கப்பட்டிருந்தது. இச்சயெலணியானது முஸலிம்களுக்கு எதிரான செயற்பாடுகளில் முன்னனி வகிக்கின்ற, சிங்கள பெரும்பான்மையினரின் அக்கறைகளை ஊக்குவிக்கின்ற மற்றும் அவற்றிற்கு ஆதரவு வழங்குகின்ற நபர் என நன்கறியப்பட்ட வரலாறினைக் கொண்ட பௌத்த பிக்கு ஒருவரால் தலைமை தாங்கப்பட்டது. எவ்வாறெனினும், இந்நகர்வானது குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சமவாயத்தின் உறுப்புரை 26 இனையும் மீறுகின்றது.[53]

இன-மத அல்லது மொழி சிறுபான்மையினர் வாழ்கின்ற இடங்களில் அத்தகைய சிறுபான்மைகளைச் சேர்ந்த நபர்கள் அவர்களின் குழுவிலுள்ள ஏனைய அங்கத்தவர்களுடன் இணைந்து சமுதாயத்தில் தங்களுடைய உரிமைகளை அனுபவிப்பதற்கு இருக்கின்ற உரிமையினை மறுத்தலாகாது என கூறுகின்றது. அத்துடன் அவர்களுக்கு தங்களுடைய கலாசாரம், மதத்தினை வெளிப்படுத்துவதற்கான மற்றும் ஏற்றுக்கொள்வதற்கான அல்லது தங்களுடைய மொழியினைப் பயன்படுத்துவதற்கான உரிமையும் காணப்படுகின்றது. எவ்வாறெனினும், 2022 மார்ச் மாதத்தில், நாட்டிலுள்ள அனைத்து மாகாணங்களிலுமுள்ள பொது மக்கள் மற்றும் கல்வியியலாளர்களைக் கலந்துரையாடுவதற்காக செயலணிக்கு வழங்கப்பட்ட காலம் போதாது என கூறி ஜனாதிபதி இச்செயலணியின் பதவிக்காலத்தை இன்னும் மூன்று மாதங்களுக்கு நீட்டித்தார்.[54]

## தகனக் கொள்கை

ஏப்ரல் 2020 இல் கொவிட்-19 நோய் நிலைமை ஆரம்பித்ததுடன், 190 நாடுகளுக்கும் மேற்பட்ட நாடுகள் குறிப்பிட்ட வழிகாட்டல்களுடன் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதித்திருந்தன. எவ்வாறெனினும், இலங்கை அரசாங்கமானது கொவிட்-19 காரணமாக இறந்தவர்களைக் கட்டாயமாகத் தகனம் செய்ய வேண்டும் என்ற கொள்கையினை அமுல்படுத்தியது.[55] இத்தகனக் கொள்கையானது முஸ்லிம் சமுதாயத்தினரின் அடிப்படை மத உரிமையினை இழக்கச் செய்வதாக அமைந்திருந்தது. எவ்வாறெனினும், அடக்கம் செய்வதனால் கொவிட் வைரஸ் நிலத்தடி நீரில் பரவி எதிர்காலத்தில் இன்னும் அதிகமாகப் பரவுவதற்கு வழிவகுக்கும் என்ற அடிப்படையில் இக்கொள்கை அமுலாக்கப்பட்டது. இச்சூழ்நிலையானது முஸ்லிம் சமுதாயத்தினரை வருந்தச் செய்ததுடன் விரக்தியடையச் செய்தது. அரசாங்கத்தின் இந்நகர்வு தொடர்பான அவர்களது திருப்தியின்மையினை அவர்கள் ஆர்ப்பாட்டங்களினூடாக

---

[53] Palansuriya, N., 2021. *One Country, One Law – What Does It Mean for Justice and Democracy?*. [online] Available at: https://www.cepa.lk/blog/one-country-one-law-what-does-it-mean-for-justice-and-democracy/

[54] Economy Next. 2022. *Sri Lanka president extends tenure of controversial 'One Country, One Law' task force*. [online] Available at: https://economynext.com/sri-lanka-president-extends-tenure-of-controversial-one-country-one-law-task-force-91025/

[55] BBC News. 2021. *Covid-19: Sri Lanka reverses 'anti-Muslim' cremation order*. [online] Available at: https://www.bbc.com/news/world-asia-56205737

வெளிப்படையாகவே வெளிப்படுத்தினார்கள். 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து உலக சுகாதார ஸ்தாபனமானது தகனம் கொவிட்-19 இன் பரவலைத் தடுக்கும் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்பதனை மீண்டும் மீண்டும் கூறி வந்தது. 2020 ஏப்ரல் 20 அன்று, உலக சுகாதார ஸ்தாபனமானது தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் "தொற்று நோய்களினால் இறந்தவர்களின் உடலங்கள் தகனம் செய்யப்பட வேண்டுமென பொதுவானதொரு மாயை உள்ளது- ஆனால், அது உண்மை அன்று. தகனம் என்பது கலாசாரத் தெரிவொன்றாகும் என்பதுடன் அது கிடைக்கக்கூடிய வளங்களிலும் தங்கியுள்ளது" என வெளியிட்டிருந்தது.[56] அதேபோல, இலங்கை சமுதாய மருத்துவர்கள் கல்லூரி மற்றும் இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் போன்றனவும் கொவிட்-19 இனால் இறந்தவர்களின் உடலங்களை அடக்கம் செய்வதனால் பொது சுகாதாரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்பதற்கு எவ்வித சான்றும் இல்லை என கூறி அறிக்கைகளை வெளியிட்டிருந்தன.[57] அடக்கத்தினால் எவ்வித அபாயமும் நேராது என்பதனை விஞ்ஞானபூர்வ ஆதாரங்களைக் காட்டி நிரூபித்து கட்டாயத் தகனக் கொள்கையினை மாற்றுவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளைப் பொருட்படுத்தாது, கொவிட் இனால் இறந்தவர்களின் உடலங்கள் தொடர்ந்து தகனம் செய்யப்பட்டன. எவ்வாறெனினும், 2021 பெப்ரவரியில், இக்கொள்கை அமுல்படுத்தப்பட்டு ஒரு வருடத்திற்கு பின்னர், அரசாங்கம் அதனை இரத்து செய்வதற்கு தீர்மானித்தது.[58]

## புர்கா மற்றும் மதராஸா மீதான தடை

2021 மார்ச் மாதம் பௌத்த விகாரையொன்றில் இடம்பெற்ற ஒரு விழாவில் முன்னாள் பெது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர புர்கா தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என கூறி அதனைத் தடை செய்வதற்கு அவர்கள் முயற்சிப்பதாகக் கூறினார். இவ் அறிக்கையினையொட்டி, 2019 இல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்றதன் பின்னர் நாட்டில் தற்காலிக புர்கா தடையொன்று அமுல்படுத்தப்பட்டது. புர்கா அணிவதற்கான இத்தடையானது அரசியலமைப்பின் உறுப்புரை 14(1)(உ) உடன் முரண்படுவதோடு மத வெளிப்படுத்தல்கள் தொடர்பான சுதந்திரம் தொடர்பான சர்வதேச சட்டத்தினையும் மீறுகின்றது.[59]

[56] World Health Organization via Twitter. 2020. [online] Available at: https://twitter.com/who/status/1248611493320392709

[57] *Sri Lanka: Compulsory cremation of COVID-19 bodies cannot continue, say UN experts*. 2021. [online] Available at: https://www.ohchr.org/en/press-releases/2021/01/sri-lanka-compulsory-cremation-covid-19-bodies-cannot- continue-say-un?LangID=E&NewsID=26686

[58] France 24. 2021. *Sri Lanka ends forced cremations after Imran Khan's visit*. [online] Available at: https://www.france24.com/en/live-news/20210226-sri-lanka-ends-forced-cremations-after-imran-khan-s-visit

[59] The Guardian. 2021. *Sri Lanka to ban burqa and close 1,000 Islamic schools*. [online] Available at: https://www.theguardian.com/world/2021/mar/13/sri-lanka-to-ban-burka-and-close-1000-islamic-schools

மேலும், முன்னாள் பெது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அவர்கள் நாட்டிலுள்ள பதிவு செய்யப்படாத மதராஸா பாடசாலைகள் (அண்ணளவாக ஆயிரம்) தேசிய கல்வி கொள்கையினை பின்பற்றாதிருக்கின்றமையினால் அவற்றைத் தடை செய்வதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார். இதற்கு பதிலிறுக்குமுகமாக தேசிய சமாதான பேரவையானது, பதிவு செய்யப்படாத மதராஸா பாடசாலைகளை மூடுவதற்கு பதிலாக அவற்றைக் கண்காணிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென கூறியது. மேலும், ஏனைய மதங்களைச் சேர்ந்த ஞாயிறு பாடசலைகளும் எவ்வித பாரபட்சமுமின்றி பதிவிற்கான ஏற்பாடுகளை இதனையொத்ததாகக் கொண்டிருக்க வேண்டுமென்பதனை வலியுறுத்தியது.[60]

## வெறுப்பு பேச்சு தொடர்பான சட்டக் கட்டமைப்பு

மதத்தினை இலக்கு வைக்கின்ற வெறுப்பு பேச்சு தொடர்பாக வழக்கு தொடர்வதற்கு இலங்கையிலுள்ள பல சட்டங்களைப் பயன்படுத்த முடியும். இலங்கையின் தண்டனை சட்டக் கோவையின் பிரிவு 291(அ) ஆனது மத உணர்வுகளைக் காயப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் செய்யப்படுகின்ற வெளிப்படுத்தல்களையும் பிரிவு 291(ஆ) ஆனது குறித்த குழுவொன்றி மத உணர்வுகளைத் தூண்ட வேண்டுமென்ற மற்றும் தீங்கான எண்ணத்துடன் செய்யப்படுகின்ற வெறுப்பு பேச்சு போன்ற செயல்களையும் வரையறுக்கின்றது. அதேபோன்று அத்தியாயம் XV ஆனது வெறுப்பு பேச்சு போன்ற வேண்டுமென்று மற்றும் தீங்கான எண்ணத்துடன் செய்யப்படுகின்ற மத நம்பிக்கைகள் தொடர்பான வெறுக்கத்தக்க முன்மொழிவுகளை வரையறுக்கின்றது. மேலும், குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச் சட்டத்தின் உறுப்புரை 20 ஆனது, பாரபட்சம், விரோதம் அல்லது வன்முறைக்கான தூண்டுதலை உள்ளடக்குகின்ற தேசிய, இன அல்லது மத வெறுப்பு நியாயப் பிரசாரங்களைத் தடை செய்கின்ற உறுப்புரை III இனூடாக இயற்றப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், 2018 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில், வெறுப்பு பேச்சு பேசுகின்ற குற்றவாளிகளுக்கெதிராக சட்டத்தை அமுல்படுத்துவதில் அல்லது வழக்குத்தொடர்வதில் இடைவெளிகள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.[61]

## மதத் தலங்களை பதிவு செய்வது தொடர்பான 2008 ஆம் ஆண்டின் சுற்றுநிரூபம்

பௌத்த சாசனம் மற்றும் மத விவகாரங்களுக்கான அமைச்சானது 2008 ஒக்ரோபரில் புதிய வழிபாட்டிடங்களின் கட்டுமானம் தொடர்பான சுற்றுநிரூபமொன்றினை வெளியிட்டது. இச்சுற்றுநிரூபத்திற்கு அமைய, புதிதாகக் கட்டப்படுகின்ற எந்தவொரு வழிபாட்டிடமும் பதிவு

[60] The Island. 2021. *Banning burqas and madrasas would have impacted rights – NPC*. [online] Available at: https://island.lk/banning-burqas-and-madrasas-would-have-impacted-rights-npc/

[61] Centre for Policy Alternatives. 2018. *Confronting Accountability for Hate Speech in Sri Lanka: A Critique of the Legal Framework*. [online] Available at: https://www.cpalanka.org/wp-content/uploads/2018/09/Confronting- Accountability-for-Hate-Speech-in-Sri-Lanka-2018.pdf

செய்யப்படுதல் வேண்டும். எவ்வாறெனினும், 2018 இல் இலங்கை உச்ச நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்மானமொன்று, மத இடங்களின் பதிவு மற்றும் கட்டுமானம் தொடர்பாக வெளியிடப்பட்ட 2008 ஆம் ஆண்டு சுற்றுநிரூபம் மற்றும் அதன் தேவைப்பாடுகள் என்பன பௌத்த வழிபாட்டிடங்கள் தொடர்பில் மாத்திரமே ஏற்பாகும் என கூறியது. ஆக, இலங்கை சட்டத்திற்கமைய மத தலங்களை/இடங்களைப் பதிவு செய்வதற்கான எவ்வித சட்டத் தேவைப்பாடும் இல்லை. எனினும், வேறுபட்ட உள்ளூரதிகார சபைகள் 2008 சுற்றுநிரூபத்தினை சுட்டிக்காட்டி ஏனைய மத குழுக்களின் தலைவர்களை அவர்களது ஏற்கனவே இருக்கின்ற அல்லது புதிதாகக் கட்டப்பட்ட மத இடங்களைப் பதிவு செய்யுமாறு கோரி வருகின்றன. எவ்வாறெனினும், அச்சுற்றுநிரூபம் சட்டமொன்றென்ற ரீதியில் நிலைநிறுத்தப்பட்ட சந்தர்ப்பங்களும் கடந்த காலங்களில் இடம் பெற்றிருந்தன. உதாரணமாக, 2017 ஜூன் 28 ஆம் திகதியன்று, இலங்கை உச்ச நீதிமன்றம் மதராஸா ஒன்றின் கட்டுமானம் தொடர்பில் தீர்ப்பளிதத்தது. நீதிமன்றமானது, 2008 சுற்றுநிரூபத்தினை சட்டமாகப் பொருட்கோடல் செய்ய முடியுமென்றும், மனுதாரர்கள் அச்சுற்றுநிரூபத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கவில்லை என்றும் தீர்ப்பளித்தது.[62]

## மத சுதந்திரம் மற்றும் அதன் சவால்கள்

இவ் அத்தியாயத்தின் பிரதான நோக்கம் இலங்கையில் மத சுதந்திரம் தொடர்பான மேலதிக புரிதலைப் பெற்றுக் கொள்தலாகும். குறிப்பாக, அது மூன்று மத குழுக்களின் மத சுதந்திரம் தொடர்பான புரிதலை வழங்குவதற்கு முயற்சிக்கின்றது. இங்கு, தெரிவு செய்யப்பட்ட மத குழுக்களின் மத சுதந்திரத்திற்கான தடைகள் பரிசீலிக்கப்பட்டுள்ளன என்பதுடன் மத சுதந்திரம் தொடர்பான முழுமையான புரிதலைப் பெறுவதற்காக இத்தடைகள் விதிக்கப்படுகின்ற பின்னணிகள் மற்றும் அவற்றை விதிக்கின்ற நபர்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது. மேலும், இக்கற்கையானது தெரிவு செய்யப்பட்ட மதக் குழுக்களிலுள்ள பெண்கள் தங்களுடைய மதக் குழுக்களில் மற்றும் அதற்கப்பால் தங்களுடைய மதத்தினை நடைமுறைப்படுத்துவதில், தாங்கள் பெண்களாயும் குறிப்பிட்ட மதக்குழுமத்தைச் சேர்ந்தவர்களாயும் இருக்கின்ற காரணத்தினால் எதிர்கொள்கின்ற சவால்களை ஆராயும்பொருட்டு அவர்கள் தொடர்பில் கவனம் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

வேறுபட்ட பல ஆய்வு நிறுவனங்கள் இலங்கையில் மத சுதந்திரம் தொடர்பான புரிதலைத் தரக்கூடிய பல கற்கைகளை முன்னெடுத்துள்ளன. 2018 இல் தேசிய சமாதானப் பேரவையினால் செய்யப்பட்ட மத சுதந்திரம் தொடர்பான கற்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தரவுகள் இலங்கையில் வேறுபட்ட மதக் குழுக்கள் தொடர்பாக பிராந்திய மற்றும் தேசிய

[62] Available at: https://www.minormatters.org/storage/app/uploads/public/5b5/5a4/4be/5b55a44be214a270694958.pdf

மட்டத்தில் இடம்பெற்றுள்ள மத சுதந்திரத்துடன் தொடர்புடைய முக்கிய நிகழ்வுகளை அறிந்து கொள்வதற்கு உதவுகின்றன.[63]

இக்கற்கையிலிருந்து அடையாளங் காணக்கூடிய ஒரு நிகழ்வு யாதெனில் பெரும்பான்மையான இலங்கையர்கள் (62.5%) இந்நாட்டில் மத சுதந்திரம் இருப்பதாக நம்புகின்றனர் (பின்னிணைப்பில் வரைபு *1* இனைப் பார்க்க). மறுதலையாக, இக்கற்கையின் தரவுப் பகுப்பாய்வானது ஐந்து மதக் குழுக்களும் தங்களுடைய மத சுதந்திரம் தொடர்பாக ஒரே மாதிரியாக தீர்மானித்திருக்கவில்லை என்பதனைக் காட்டுகின்றன.

மதம் தொடர்பாகப் பார்க்கின்றபோது, இவ் ஆய்வானது, முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் (றோமன் கத்தோலிக்கமல்லாத கிறிஸ்தவ சபைகள்) மற்றும் இந்துக்கள் ஆகிய மூன்று சிறுபான்மை மத குழுக்களும் தங்களுடைய மத சுதந்திரம் நாட்டில் சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளதாக நம்புகின்றனர் என்பதனை அடிக்கோட்டிட்டுக் காட்டுகின்றது என்பதனை குறித்து கொள்தல் முக்கியமாகும்.

இலங்கையிலுள்ள முஸ்லிம்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் அவர்களுடைய மத சுதந்திரம் ஏதோ ஒரு வழியில் தடைபட்டிருப்பதாக நம்புகின்றனர் என்பது தரவுகளிலிருந்து தெளிவாகின்றது. அத்துடன், 41.9% ஆன கிறிஸ்தவ சமுதாயத்தினர் மற்றும் 37.2% ஆன இந்து சமுதாயத்தினர் நாட்டில் தங்களுடைய மத சுதந்திரத்திற்கு ஏதோ ஒரு சில தடைகள் இருப்பதாக நம்புகின்றனர் (இணைப்பில் வரைபு *2* இனைப் பார்க்க)

எவ்வாறெனினும், இக்கற்கையானது, முஸ்லிம்கள், இந்துக்கள் மற்றும் றோமன் கத்தோலிக்கமல்லாத கிறிஸ்தவர்களுடைய மத சுதந்திரம் எவ்வாறு மீறப்படுகின்றது என்பது தொடர்பான அவர்களது அனுபவம் தொடர்பான சுவாரஸ்யமான விடயமொன்றினை இவ் ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது. இம்மூன்று மதக் குழுக்களும் தங்களுடைய மத சுதந்திரம் தொடர்பாக நாட்டில் ஏதோ ஒரு தடை உள்ளது என நம்புகின்றபோதிலும், உள்ளூர் மட்டத்தில் தங்களுடைய மதத்தினை பின்பற்றுவதற்கான சுதந்திரம் தொடர்பாகக் கேட்டபோது, தடை இருப்பதாக முதன்மையாகக் கூறியவை கிறிஸ்தவ சமுதாயமும் (28.4%) இந்து சமுதாயமுமே (19.8%) ஆகும். (இணைப்பில் வரைபு *3* இனைப் பார்க்க)

இப்பின்னணியினைக் கவனத்திற் கொண்டு, பின்வரும் அத்தியாயங்கள் இம்மூன்று

[63] இது களமட்டத்தில் நிபுணர்களின் பங்குபற்றுகையுடன் நடத்தப்பட்ட ஆய்வாகும். இவ் ஆய்வானது அனைத்து ஐந்து மத குழுக்கள்/ அரசாங்க அலுவலர்கள்/ பொலிஸ் மற்றும் ஐந்து மத குழுக்களைச் சேர்ந்த *823* உள்ளூர் சமுதாய தலைவர்கள் என்போரிடம் அவர்களுடைய பகுதிகளில் மத சுதந்திர நிலைப்பாடு எவ்வாறுள்ளது என கேட்டதனூடாகச் செய்யப்பட்டுள்ளது.

சிறுபான்மை மதக் குழுக்களும் எவ்வாறு மத சுதந்திரத்தினை அனுபவிக்கின்றன மற்றும் அவை எவ்வாறு மற்றும் எந்தளவிற்கு ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகின்றன என்பதனை முன்னிலைப்படுத்திக் காட்ட முயற்சிக்கின்றன.

## முஸ்லிம் சமுதாயம்

முஸ்லிம்களுக்கு எதிரான கிளர்ச்சிகள் தொடர்பான இலங்கை வரலாறு *1915* இற்கு பிற்பட்டதாகும். முஸ்லிம்களுக்கு எதிரான இத்தகைய கிளர்ச்சிகளுக்கான பிரதான காரணங்களை அடையாளம் காண்பதில் பொருளாதாரம் மற்றும் அரசியல் என்பன அடிப்படையாகவுள்ள அதேவேளை, அவை குறிப்பான மத சடங்குகள் மற்றும் வழக்காறுகளிலிருந்து தனிநபர்களுக்கிடையிலான வேறுபாடுகள் மற்றும் முரண்பாடுகள் வரை பல்வேறுபட்ட காரணிகளினாலும் ஏற்படுகின்றன. யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் இலங்கையில் முஸ்லிம் சமுதாயத்தினருக்கு எதிரான பல்வேறு பாரிய கிளர்ச்சிகள்/மோதல்களை அடையாளங் காண முடியும். பேருவளை மோதல்[64], திகன மோதல்[65] மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்[66] போன்ற பாரிய கிளர்ச்சிகளைத் தவிர, முஸ்லிம்

---

[64] இம்மோதலானது சிங்கள பௌத்தர் ஒருவருக்கும் முஸ்லிம் குழுக்களுக்குமிடையே அளுத்கமவிலுள்ள தர்கா நகரத்தில் 2014 ஜுன் 15 அன்று ஆரம்பித்தது. இச்சம்பவத்திற்கான பிரதான தூண்டல் பொசன் பூரணை தினத்தன்று, 2014 ஜுன் 12, அயகம சமித்த தேரரின் வாகனத்தினை முஸ்லிம் இளைஞர் ஒருவர் தடை செய்தமை ஆகும். சிங்கள பௌத்த அமைப்புக்கள் மற்றும் பிரதேசவாசிகள் இச்சம்பவம் தொடர்பாக அளுத்கம பொலிஸ் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் செய்ததுடன் நியாயமான விசாரணை முன்னெடுக்கப்படவில்லை என குற்றம் சாட்டியதுடன் பல முஸ்லிம் வியாபார நிலையங்கள் தாக்கப்பட்டன. 2014 ஜுன் 15 அன்று பொதுபல சேனா உள்ளடங்கலாக பௌத்த அமைப்புக்களினால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த 'Avadivav Bodu Maha Samuluwa' என அறியப்பட்ட மாநாடு அளுத்கம நகரில் நடைபெற்று முடிவுற்றதும் அச்சனத்திரள் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த தர்காநகருக்குள் நடைபவனி செய்தபோது மோதல் ஆரம்பமானது. அளுத்கம மற்றும் பேருவளை நகரங்களில் உள்ள பல இடங்களில் மோதல் இடம்பெற்றதுடன், பாரதூரமான ஆதனச் சேதம் மற்றும் உயிரிழப்பு அறிக்கையிடப்பட்டது.
BBC News සිංහල. 2014. *අලුත්ගම සට බේරුවලටත් ඇදිරි නීතිය*. [online] Available at:
https://www.bbc.com/sinhala/sri_lanka/2014/06/140615_aluthgama_clashes_video BBC
News සිංහල. 2014. *අළුත්ගම සන්සුන්*. [online] Available at:
https://www.bbc.com/sinhala/sri_lanka/2014/06/140613_aluthgama_muslim_shops_attacked

[65] சிங்கள பௌத்த ஆணொருவர் தல்தெனியவில் வைத்து முஸ்லிம் இளைஞர்கள் குழுவொன்றினால் 22, பெப்ரவரி 2018 அன்று தாக்கப்பட்டதனைத் தொடரட்ந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், அவர் 2018 மார்ச் 4 அன்று மரணமடைந்தார். அதனைத் தொடர்ந்து கடுகஸதொட்டை, அம்பத்தேன, பூஜாபிடிய, அலதெனிய போன்ற இடங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை பதிவாகியது. 17 பள்ளிவாசல்கள், 91 வியாபார நிலையங்கள் மற்றும் 62 வீடுகள் முற்றாகச் சேதமாக்கப்பட்டதாக இலங்கை முஸ்லிம் பேரவை அறிவித்தது. பௌத்த பிக்குகள் மற்றும் மஹாசன் பலகாய போன்ற முஸ்லிம்களுக்கெதிரான சிங்கள பௌத்த அமைப்புக்கள் திட்டமிட்டவகையில் தலையீடு செய்ததுடன் அவற்றின் தலைவர்கள் கைது செய்யப்பட வேண்டியிருந்தது. திகன மற்றும் கண்டி நிர்வாக மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன் சூழ்நிலையினைக் கட்டுப்படுத்துவதற்காக சமூக ஊடக தடை விதிக்கப்பட்டது.
BBC News සිංහල. 2018. ' මහසෝන් බලකායේ ප්‍රධානියා අත් අඩංගුවට. [online] Available at:
https://www.bbc.com/sinhala/sri-lanka-43333317
BBC News සිංහල. 2018. " මේක ජාතිවාදය නොවේ, මෙතන ආවේ මංකොල්ල කන්න". [online] Available at: https://www.bbc.com/sinhala/world-43351793

[66] 2019, ஏப்ரல் 21 ஆன உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதல் கடுவாபிடிய புனித அந்தோனியார் தேவாலயம், மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் மற்றும் கொச்சிக்கடை புனித செபஸ்தியன் தேவாலயம் மற்றும் கொழும்பிலுள்ள சங்ரிலா விடுதி, சினமன் கிராண்ட் விடுதி மற்றும் கிங்ஸ்பரி விடுதி ஆகியவற்றை இலக்கு வைத்ததுடன் இதில் 270 பேர் கொல்லப்பட்டதுடன் 300 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர். தாக்குதலானது இஸ்லாமிய தீவிரவாதக் குழுவொன்றினால் நடத்தப்பட்டதாக பாதுகாப்பு படைகள் தெரிவித்தன. தாக்குதலை தடுக்கத் தவறியமை குறித்து பாதுகாப்பு படைகள் விமர்சிக்கப்பட்டதுடன் இதற்கான நீதியும் இன்னமும் வழங்கப்படவில்லை.
BBC News සිංහල. 2021. අප්‍රේල් 21 අනතුරු ඇඟවීම ගැන දැනසිටියේ කවුද?. [online] Available at:
https://www.bbc.com/sinhala/sri-lanka-56777369

சமுதாயத்தினரை இலக்கு வைக்கின்ற வெறுப்பு மற்றும் சந்தேகங்கள் போருக்கு பின்னரான காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க நிகழ்வொன்றாக மாறியுள்ளது. இம் மோதல் சூழ்நிலைகளுக்கு மேலதிகமாக, காலத்திற்கு காலம் இடம்பெற்ற கிளர்ச்சிகள் மற்றும் வேறுபட்ட பல சம்பவங்கள் முஸ்லிம் சமூகத்தின் மத சுதந்திரத்திற்கு சவால் விடுத்துள்ளன.

இலங்கையில் முஸ்லிம்களின் மத சுதந்திரத்திற்கு காணப்படுகின்ற சவால்களின் முதன்மையான அம்சம் யாதெனில் அவை பெரும்பாலும் ஏனைய மத குழுக்களுடன் ஏற்படுகின்ற நாளாந்த செயற்பாடுகளுடன் தொடர்புள்ளதாக இல்லாமல், மாறாக, அவை தேசிய மட்ட உருவாக்கங்களாகக் காணப்படுகின்றன. உதாரணமாக, ஹலால் தரப்படுத்தலுக்கெதிரான ஆர்ப்பாட்டங்கள், புர்கா தடை, முஸ்லிம் பெரும்பான்மையிராக வர முயற்சிக்கின்றார்கள் என்கின்ற குற்றச்சாட்டு மற்றும் ஏனைய மதக் குழுவைச் சேர்ந்தவர்களை தங்களுடைய மதத்திற்கு மாற்ற முயற்சிக்கின்றார்கள் என்கின்ற குற்றச்சாட்டு அல்லது சிங்கள இனத்தவரை இனவிருத்தி செய்ய முடியாதவர்களாய் ஆக்குகின்றனர் என்கின்ற குற்றச்சாட்டு அதேபோல முஸ்லிம் சமுதாயத்திற்கும் தீவிரவாதத்திற்கும் தொடர்புகள் இருப்பதாக முன்னிலைப்படுத்தி காட்டுதல் என்பன தேசிய மட்டத்தில் எழுகின்ற சொல்லாடல்கள் ஆகும். இத்தகைய தேசிய மட்ட சொல்லாடல்கள் பெரும்பாலும் அரசியல் மற்றும் பொருளாதார காரணங்களினால் தோன்றுகின்றன என எமது நேர்காணல்கள் வெளிப்படுத்துகின்றன. அதற்கமைய, அரசியல் தேவைகள் மற்றும் பொருளாதார தேவைகள் போன்ற காரணிகள் எவ்வாறு முஸ்லிம் சமுதாயத்தின் மத சுதந்திரத்தினைப் பாதிக்கின்றன என்பதனைத் தனியாகக் கலந்துரையாட வேண்டிய தேவை உள்ளது.

**அரசியல் அக்கறைகள்**

பிராந்திய மட்டத்தில் மத ஒற்றுமைக்காகப் பணியாற்றுகின்ற சிவில் சமூக அமைப்புக்களுடனான கலந்துரையாடல்கள் தேசிய மட்டத்தில் முஸ்லிம்களுக்கெதிரான சித்தாந்தங்களைத் தோற்றுவிப்பதில் கட்சி அரசியல் முக்கிய வகிபங்காற்றுகின்றது என்பதனை வெளிப்படுத்துகின்றன. கம்பஹா மாவட்டத்தினைச் சேர்ந்த பதிலிறுப்பவரொருவர் 'யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் பல்வேறுபட்ட பௌத்த தீவிரவாதக் குழுக்களின் நடவடிக்கைகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் போன்ற நிகழ்வுகளை முஸ்லிம்களுக்கு எதிரான பொது ஆர்ப்பாட்டங்களை உருவாக்குவதற்கு பயன்படுத்தக்கூடியவாறான ஒரு சூழ்நிலையினைத் தோற்றுவித்துள்ளதுடன் அவர்கள் தேர்தல் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அத்தகைய வகுப்புவாத அரசியல் பின்னணிகளைப் பயன்படுத்திக் கொள்கின்றனர் என கூறியிருந்தார். எங்களைத் தொடர்பு கொண்ட மற்றுமொர பதிலிறுப்பவர் பௌத்த தீவிரவாதக் குழுக்கள் பெரும்பாலும் குறிப்பிட்ட அரசியல் கிளைகளுக்கு கீழேயே இடம்பெறுவதாகக் கூறியிருந்தார். மேலும், கடந்த காலங்களில் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே இடம்பெற்ற சிறிய விடயங்கள் கூட சமூக ஊடகம் மற்றும் வெகுசன ஊடகம் வாயிலாகப்

பரப்புரை செய்யப்பட்டதுடன், அவை பெரும்பான்மையினரின், அதாவது சிங்கள பௌத்தர்களின் மனதில் தேசிய பாதுகாப்பு தொடர்பான நம்பிக்கையின்மை மற்றும் சந்தேகங்கள் தோன்றுவதற்கு வழிவகுத்திருந்தது என கூறியிருந்தார். மதங்களுக்கிடையிலான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த செயற்பாட்டாளர் ஒருவர் கடந்த காலத்தில் தோற்றம் பெற்ற சந்தேகங்கள் சாம்பலுக்கிடையே மறைந்திருக்கும் நெருப்பு போன்றனவாகும்- அவை எந்நொடியிலும் மீண்டும் எரிய ஆரம்பிக்கலாம் என கூறியிருந்தார்.[67]

முஸ்லிம்களுக்கெதிரான கிளர்ச்சிகளுக்கும் தேசிய மட்ட அரசியலுக்குமிடையே மற்றுமொரு தொடர்பும் காணப்படுகின்றது. மதங்களுக்கிடையிலான பதட்டம் மற்றும் மோதல்கள் இலங்கையின் தேர்தல் முறைமையோடு தொடர்புற்றுள்ளதென சிவில் சமூக ஆர்வலர்கள் கருதுகின்றனர். உயிர்த்த ஞாயிறு போன்ற தாக்குதல்கள் பெரும்பாலும் தேர்தல்களுக்கு முன்னதாகவே இடம்பெற்றுள்ளன என்பது அவர்களது அவதானிப்பாக உள்ளது. 2019 இல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற பின்னர், சிலைகள் மற்றும் புனித சின்னங்களைத் தாக்குவதனூடாக கத்தோலிக்க சமுதாயத்தினருக்கு அச்சுறுத்லொன்று உள்ளது என்பதனை நினைவு படுத்தியதனூடாக அரசியல் நன்மையினைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சியினை அத்தகைய உதாரணமொன்றாகக் குறிப்பிடலாம். எவ்வாறெனினும், இத்தகைய சொல்லாடல்கள் தேர்தல்களுக்கு பின்னர் நீர்த்து போகின்ற போக்கினையும் அவர்கள் அவதானித்துள்ளனர். அத்துடன் 2020 ஆம் ஆண்டு பொது தேர்தல்களுக்கு பின்னர், உள்ளூர் மட்டத்தில் இடம்பெற்று வந்த பெரும்பாலான வகுப்புவாத பதட்டங்கள் தணிந்தமையினை அவர்கள் அவதானித்துள்ளனர்- இதற்கான காரணம் உள்ளூர் மட்டத்தில் மக்களை அணி திரளச் செய்த அரசியல் தரகர்கள் தேர்தல்களின் முடிவில் எதனையும் பொருட்படுத்தாத போக்கொன்றினைக் கைகொண்டமை ஆகும். இது கட்சி அரசியல் அக்கறைகளுக்கும் முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வுகளுக்கும் பரஸ்பர உறவிருப்பதனை எடுத்துக் காட்டுவதுடன் அது முஸ்லிம்களின் மத சுதந்திரத்தினை சவாலுக்குட்படுத்துகின்றது.

**வியாபார அக்கறைகள்**

முஸ்லிம் சமுதாயத்தினருக்கெதிராக சிங்கள பௌத்தர்களால் காட்டப்படுகின்ற எதிர்ப்பிற்கு பின்னால் வியாபார அக்கறைகள் காணப்படுகின்றமையும் நிரூபணமாகியுள்ளது. குருணாகல் மாவட்டத்திலுள்ள பதிலிறுப்பவரொருவருடன் செய்யப்பட்ட நேர்காணல்களில் வலியுறுத்தப்பட்டதற்கமைய, முஸ்லிம் சமுதாயத்தினரை இலக்கு வைக்கின்ற பல பதட்டங்கள் நகர் பகுதிகளிலேயே இடம்பெறுகின்றன என்பதுடன் இதற்கான காரணம் சிங்கள வியாபாரிகளுக்கும் முஸ்லிம் வியாபாரிகளுக்கும் இடையே காணப்படுகின்ற போட்டியாகும்.

[67] Moinudeen, S. (2021). Ethno-centric pandemic governance: The Muslim community in Sri Lanka's COVID response. In P. Peiris (Ed.), *Is the cure worse than the disease? Reflections on COVID governance in Sri Lanka* (pp. 111-128). Social Indicator, Centre for Policy Alternatives.

விசேடமாக சிங்கள-தமிழ் புத்தாண்டு காலம் போன்ற விழாக் காலங்களின்போது சிங்கள சமுதாயத்தவர்கள் முஸ்லிம் கடைகளுக்கு செல்வதனைத் தவிர்க்கச் செய்யும் எண்ணத்துடன் வேறுபட்ட பயங்கள் மற்றும் சந்தேகங்கள் பரப்பப்படுவதாகப் பதிலிறுப்பவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். இதன் காரணமாக, முஸ்லிம் சமுதாயத்தினரின் மத அடையாளம் அவர்களுடைய வியாபார நடவடிக்கைகளுக்கான சவாலொன்றாக மாறியுள்ளது. ஆகவே, முஸ்லிம் சமுதாயத்தினரின் மத சுதந்திரத்தைப் பொறுத்தவரையில் வியாபார நடவடிக்கைகள் மற்றும் வியாபார அக்கறைகள் தீர்மானிக்கின்ற சக்தியினைக் கொண்டிருக்கின்றன என கூறுதற்கியலும். சிங்கள பௌத்தர்கள் மற்றும் முஸலிம் வர்த்தகர்கள் ஆகிய இரு தரப்பினரும் விவசாயத்தினைப் பொறுத்தவரையில் வேறுபட்ட வகிபாகங்களை வகிப்பதனால் கிராமப்புற பகுதிகளில் மோதல்கள் குறைவாகவே காணப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் பொருளாதார காரணியில் தங்கியுள்ளது. உதாரணமாக, அக்குரணை பிரதேசத்தில் நடத்தப்பட்ட நேர்காணலொன்றில் சிங்கள வியாபார சமுதாயத்தினைச் சேர்ந்த பதிலிறுப்பவரொருவர், முஸ்லிம் வர்த்தகர்கள் சிங்கள விவசாயிகளிடமிருந்து பயிர்களை வாங்குவதற்காக கிராமத்திற்கு வருகின்றார்கள்- இது மிளகு போன்ற தானியங்களை விதைக்கின்ற விவசாயிகள் தங்களுடைய பொருட்களுக்கான சந்தை வாய்ப்புக்களை அடைந்து கொள்வதற்கு உதவியாக அமைந்துள்ளது என கூறியிருந்தார்.

பெரும்பாலும் அரசியல் மற்றும் வியாபார அக்கறைகளின் காரணமாக தேசிய மட்டத்தில், முஸ்லிம் சமுதயாத்தினரை இலக்கு வைத்து செய்யப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் பிராந்திய மட்டத்தில் முஸ்லிம்களைப் பற்றிய அபிப்பிராயமொன்றை உருவாக்குவதற்காக சிங்கள பௌத்தர்களாலும் ஏனைய மதக் குழுக்களாலும் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக, 2018 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வில்[68] பங்குபற்றிய கண்டி மாவட்டத்தில் வாழ்கின்ற சிங்கள சமுதாயத்தினர் அப்பிரதேசத்திலுள்ள முஸ்லிம் சமுதாயத்தினருடன் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்றால் முஸ்லிம் சமூகத்தினர் தங்களுடைய இனப்பரம்பலை விருத்தி செய்வதற்காக சிங்களவர்களின் இனப்பெருக்க ஆற்றலினை முடக்குதல், சிங்கள சமுதாயத்தினருக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகள் போன்றவற்றைச் செய்வதனைத் தவிர்க்க வேண்டுமென கூறியிருந்தனர். இத்தேவைப்பாடுகளை முஸ்லிம் சமுதாயத்தினர் பிராந்திய மட்டத்தில் பூர்த்தி செய்ய வேண்டுமென சிங்கள சமுதாயத்தினர் கூறியிருப்பினும் கூட, இவற்றுள் பல கோரிக்கைகள் தேசிய மட்டத்திலுள்ள வேறுபட்ட குழுக்களுடன் ஏற்கனவே கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் இவ் ஆய்வின் பங்குபற்றுநர்கள் அவற்றை சமூக

[68] சமூக விஞ்ஞானிகள் சங்கத்தினால் 2018 ஆம் ஆண்டு செய்யப்பட்ட கற்கை. இலங்கையில் ஒற்றுமையில் காணப்படுகின்ற வேற்றுமைகளை புரிந்துகொள்ளும் பொருட்டு, இக்கற்கையானது மக்கள் எவ்வாறு ஒற்றுமையினை தங்களுடைய 'நாளாந்த வாழ்க்கையில்' கருதுகின்றனர் என்பதனை இக்கற்கை அடையாளப்படுத்தியது. இக்கற்கைக்காக, அம்பாறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, கிளிநொச்சி, அநுராதபுர மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலுள்ள 30 கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள முஸ்லிம்கள், சிங்களவர்கள் மற்றும் தமிழர்களிடம் கலந்துரையாடல்கள் செய்யப்பட்டு அதனூடாக சில காட்டிகள் உருவாக்கப்பட்டன. இக்கற்கை அறிக்கையினை நிகழ்நிலையில் பெற முடியாது. ஆனால், சமூக விஞ்ஞானிகளின் சங்கத்தின் எழுத்த5லமான அனுமதியுடன் அதனை அணுக முடியும்.

ஊடகங்களிலிருந்து அறிந்து கொண்டுள்ளார்கள்.

இப்பின்னணியில், முஸ்லிம் சமுதாயத்தினரின் மத சுதந்திரம் பின்வரும் வழிகளினால் தடுக்கப்படுகின்றது:

- ***அவர்களுடைய மத அடையாளத்தின் காரணமாக வெறுப்பு பேச்சிற்கு ஆளாகின்றார்கள்***

  நாளாந்த வாழ்வில் முஸ்லிம்கள் தங்களுடைய மத அடையாளத்தின் காரணமாக வெறுப்பு பேச்சிற்கு ஆளாகின்றார்கள். இது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து பரவலாக அவதானிக்கப்பட்டது. எங்களால் செய்யப்பட்ட நேர்காணலில் வெளிப்படுத்தப்பட்ட அத்தகைய உதாரணங்களுள் ஒன்று, முஸ்லிம்கள் அவர்கள் தாடி வைத்திருக்கின்ற முறையினை அடிப்படையாகக் கொண்ட வெறுப்பு பேச்சுக்களுக்கு ஆளாகியுள்ளனர் என்பதாகும். சாதாரண பிரஜைகளால் மட்டுமன்றி அரசாங்க உத்தியோகத்தர்களாலும் முஸ்லிம்கள் வெறுப்பு பேச்சிற்கு ஆளாகியுள்ளனர் என அறிக்கையிடப்பட்டுள்ளது.

  களுத்துறை பகுதியில் நடத்தப்பட்ட நேர்காணலொன்றில், முஸ்லிம்கள் தொப்பியணிந்திருந்தமையினால் வெறுப்பு பேச்சிற்கு உள்ளாகியிருந்த சம்பவமொன்று வெளிப்படுத்தப்பட்டது. முஸ்லிம் ஆணொருவர் பொது போக்குவரத்திற்குரித்தான பேருந்தொன்றில் பயணித்த போது, அவருக்கு அருகில் அமர்ந்திருந்த சிங்கள ஆணொருவர் அவருடைய தொப்பியை பறித்து களு கங்கைக்குள் போட்டுள்ளார். இச்சம்பவம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு பின்னர் இடம்பெற்றதாகவும் அந்நேரத்தில் இதுகுறித்து யாரும் குரலெழுப்பவில்லை என்றும் நேர்காணலில் பங்குபற்றியிருந்த பங்குபற்றுநர் தெரிவித்திருந்தார்.

  வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற முஸ்லிம்கள் அவர்கள் மாட்டிறைச்சி உண்ணுகின்ற பழக்கத்தின் காரணமாக இந்துக்களின் வெறுப்பு பேச்சிற்கு ஆளாவதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது. உதாரணமாக, முஸ்லிம்கள் வீடுகளில் மாட்டிறைச்சி வைப்பார்கள் என்ற காரணத்தினால் இந்துக்கள் பெரும்பாலும் முஸ்லிம்களுக்கு வீடுகளை வாடகைக்கு வழங்குவதற்கு தயற்குகின்றார்கள். இந்துக்கள் முஸ்லிம்களுக்கு வாடகைக்கு வீடுகளை வழங்க தயங்குவதற்கான மற்றுமொரு காரணம் முஸ்லிம்களின் இறுதி சடங்குகளின்போது அவர்கள் வீட்டிற்குள் சடலங்களை கழுவுவதாகும் என அறிக்கையிடப்பட்டுள்ளது. மேலும், வட மாகாணத்தில் வாழ்கின்ற இந்துக்களுடன் தொடர்புடைய பதிலளிப்பவரொருவர் இந்துக்கள் முஸ்லிம்களின் கடைகளில் சாப்பிடுவதற்கு மறுப்பதனூடாக வெறுப்பு பேச்சில் ஈடுபடுகின்றனர் என கூறியிருந்தார். இதற்கான காரணமாக அவர்கள் சுட்டிக்காட்டுவது முஸ்லிம் கடைகளில் மாட்டிறைச்சி தயாரிக்கப்படுவதாகும்.

- **தொழிற்தளங்களில் மதத்தினை நடைமுறைப்படுத்துவதிலுள்ள தடைகள்**

முஸ்லிம்களால் எதிர்கொள்ளப்படுகின்ற மத சுதந்திரத்திற்கான தடைகளின் மற்றொரு வடிவமாக அமைவது தொழிற்தளங்களில் அவர்களுடைய மதத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு விதிக்கப்படுகின்ற தடை ஆகும். சில தொழிற்தளங்களில் வெள்ளிக்கிழமைகளில் பள்ளிவாசலுக்கு செல்வதற்கான வாய்ப்பினை வழங்குவதில்லை என்றும் சில வேலைதளங்களில் வெள்ளிக்கிழமை தொழுகைக்கு அனுமதித்திருந்தாலும் தொழுகைக்கு போதுமான நேரம் வழங்கப்படுவதில்லை என்றும் எங்களால் நேர்காணல் செய்யப்பட்ட முஸ்லிம் ஒருவர் கூறினார். மறுபுறம், சில அரசாங்க நிறுவனங்களில் மத நடவடிக்கைகளுக்காக காலை நேரங்களில் நேரம் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் கூட முஸ்லிம்களுக்கு பெரும்பாலும் தொழுகையினை செய்வதற்கான வாய்ப்பு கிடைப்பதில்லை என்பதும் நேர்காணல்கள் மூலமாக வெளிப்படுத்தப்பட்டன.

- **மத அடையாளத்தின் அடிப்படையில் வியாபாரங்களை புறக்கணித்தல்**

மத அடையாளத்தின் காரணமாக முஸ்லிம் வியாபாரங்களைப் புறக்கணிக்கின்றமையானது கடந்த காலம் முழுவதிலும் அவதானிக்கப்பட்ட விசேடமான சூழ்நிலையொன்றாகும். இச்சூழ்நிலையினை உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு முன்னரும், அதேபோல பின்னரும் காணக்கூடியதாக இருந்தது. சிங்கள கடைகளின் பட்டியலைத் தயாரித்து அச்சிட்டு விநியோகித்தல், புத்தர் சிலைகள் மற்றும் சின்னங்களை காட்சிப்படுத்தல், பிரித் இனை ஒலிக்கச் செய்தல் போன்ற கடையின் ‘சிங்கள அடையாளத்தைக்’ காட்டக்கூடிய செயல்களைச் செய்தல் மற்றும் முஸ்லிம்களின் கடைகளுக்கு மற்றும் வியாபார வளாகங்களுக்கு செல்கின்ற வாடிக்கையாளர்களை ‘முட்டை’ போன்ற பொருட்களால் தாக்குதல் போன்ற சம்பவங்கள் பதிவாகியுள்ளமைக்கான அறிக்கைகள் உள்ளன. விசேடமாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பின்னர் கத்தோலிக்கர்களும் முஸ்லிம்களின் வியாபாரங்களைப் புறக்கணிப்பதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. குருணாகலையிலிருந்தான பதிலிறுப்பவரொருவர் ‘‘சிங்களவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் சொந்தமான இந்நத்தார்’ என்ற வாசகத்துடன் கூடிய- சிங்கள கடைகளின் பட்டியல்கள் விநியோகிக்கப்பட்டதாகவும், நத்தார் மற்றும் தேவாலய விழாக்களின்போது கிறிஸ்தவர்களின் கவனத்தினை ஈர்க்கும் வகையிலான அலங்காரங்கள் இக்கடைகளில் செய்யப்படுவதாகவும் கூறினார். எவ்வாறெனினும், தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நெருக்கடியில், ஹலால் தரப்படுத்தல்/ இனப்பரம்பல் விருத்தியினை இல்லாதாக்குகின்ற மாத்திரைகள்/ உள்ளாடைகள் போன்ற பயங்கள் ஒரு மட்டத்திற்கு குறைந்துள்ளதாகக் கலந்துரையாடல்களின்போது

அறிக்கையிடப்பட்டது. எவ்வாறெனினும், எதிர்காலத்தில் வகுப்புவாத ஒற்றுமைக்கு இடையூறு விளைவிக்கக்கூடிய ஏதேனும் ஒரு சம்பவம் இடம்பெற்றால் இத்தகைய கலந்துரையாடல்கள் மீண்டும் சமூகத்தில் எழுச்சி பெறலாம் என முஸ்லிம் பதிலிறுப்பவொருவர் வலியுறுத்தியிருந்தார்.

- **அச்சுறுத்தல்கள் மற்றும் ஓரங்கட்டல்கள்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து, சிங்கள பௌத்தர்களிடையே முஸ்லிம்கள் தொடர்பான சந்தேகங்கள் மேலும் அதிகரித்தன. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பின்னர், வேறுபட்ட இனக் குழுக்களுக்கிடையிலான தனிநபர் உறவுகள் செல்வாக்கிற்குட்பட்டமையினைக் காண முடிந்தது. இக்காலப்பகுதியின்போது, முஸ்லிம்களும் சிங்களவர்களும் ஒருவர் தொடர்பில் ஒருவர் அச்சுறுத்தல்மிக்க வகையில் பாரபட்சமாகவும் நடந்து கொண்டதாக நேர்காணல்களின்போது வெளிப்படுத்தப்பட்டன.

குருணாகல் மாவட்டத்தினைச் சேர்ந்த பதிலிறுப்பவரொருவர் முஸ்லிம்களுக்கும் சிங்கள பௌத்தர்களுக்குமிடையிலான உறவின் முறிவினை கீழ்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:

‘‘குருணாகல் கிளர்ச்சிகளின்போது, முஸ்லிம் இளைஞரொருவரின் வீடு அதே வயதினையுடைய அவருடைய சிங்கள நண்பரொருவரினால் கற்களால் தாக்கப்பட்டது. அச்சிங்கள நண்பர் தன்னுடைய சிங்கள நண்பர்களிடையே தான் ஓரங்கட்டப்படலாமென்ற அச்சத்தினால் அந்நேரத்தில் அவ்வாறு நடந்து கொண்டார். அத்துடன் சிங்கள இளைஞர் ஒருவர் மற்றுமொரு முஸ்லிம் இளைஞரை டேக் செய்து இனவாத கதைகளை முகப்புத்தகத்தில் பகிர்ந்திருந்தார்- அது மட்டுமல்லாது முஸ்லிம்களுக்கெதிரான இனவாதம சில வட்ஸ்அப் குழுக்களிலும் காணப்பட்டது. அந்நேரத்தில் சில முஸ்லிம் நண்பர்கள் இவ் வட்ஸ்அப் குழுக்களை விட்டு வெளியேறினர். அத்துடன், அதற்கு முன்னர் இருந்ததனைப் போன்று முஸ்லிம் நண்பர்கள் பொதுவான செயற்பாடுகளில் எங்களுடன் இணைந்து பங்கேற்பது குறைவாகவே காணப்பட்டது.’’

சில முஸ்லிம்கள் இத்தகைய சூழ்நிலைகளில் இரகசியமாக வழிபாடுகளை மேற்கொண்டதாகவும் களமட்ட கலந்துரையாடல்கள் வெளிப்படுத்தின.

‘‘சிங்களவர்கள் அடிக்கடி பள்ளிவாசல்களுக்கு செல்கின்ற மற்றும் மத பிரார்த்தனைகளைக் கிரமமாகச் செய்கின்ற முஸ்லிம்களை சந்தேகக் கண் கொண்டு பார்த்தனர். இத்தகைய தீவிரவாத செயல்களை ஒழுங்குபடுத்தவும் திட்டமிடவுமே நீங்கள் வெள்ளிக்கிழமை பள்ளிவாசலுக்கு செல்கின்றீர்கள் என சிங்களவர்கள் கூறினார்கள். சில முஸ்லிம்கள் ‘நான் மின்சாரக் கட்டணம் செலுத்துவதற்காக வெளியே

செல்கின்றேன்' போன்றவாறான ஏதேனுமொரு காரணத்தினை கூறிவிட்டு தங்களுடைய கடைகளிலிருந்து வெள்ளிக்கிழமை தொழுகைக்காகப் பள்ளிவாசல்களுக்கு சென்றனர். இதற்கான காரணம் சிங்கள வாடிக்கையாளர்கள் அவர்கள் கிரமமாகப் பள்ளிவாசல்களுக்கு செல்கின்றார்கள் என அறிந்து கொண்டால் அவர்கள் வியாபார வாய்ப்புக்களை இழக்க நேரிடுமென்ற பயமாகும்.''

இப்பின்னணியில், முஸ்லிம் சமுதாயத்தினரின் வழிபடுவதற்கான சுதந்திரம் மற்றும் தங்களுடைய தொழுகைகளை நாளாந்தம் செய்வதற்கான சுதந்திரம் என்பன தொடர்பாக மட்டுப்பாடொன்று உள்ளமை தெளிவாகின்றது. மேலும், பள்ளிவாசலுக்கு அருகே புதிதாகக் கட்டப்பட்ட புத்தர் வடிவிலான வீடுகள் மற்றும் பிரித் ஒலிபரப்புக்கள் என்பன முஸ்லிம் சமூகத்தினர் தங்களுடைய மத சடங்குகளை செய்வதற்கான தடைகளாக அமைந்துள்ளன. ஒரு இளம் முஸ்லிம் இளைஞருடன் நடத்தப்பட்ட நேர்காணலின்போது அவர் பின்வருமாறு கூறியிருந்தார்:

''நகரத்துக்கு அருகில் நான்கு குறுகலான ஒழுங்கைகள் உள்ளன. ஒவ்வொரு ஒழுங்கைக்கு முன்னாலும், புத்தர் வடிவிலான வீடுகள் புதிதாகக் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன. அவ் ஒழுங்கைகளுள் ஒன்றினுள் முஸ்லிம்கள் மட்டுமே வாழ்கின்றனர். ஆனால், அதே வழியில் புத்த சாவடிகள் கட்டப்பட்டு பிரித் ஒலிபரப்பப்படுகின்றது. எங்களுடைய தொழுகை நேரத்திலேயே பிரித்தினையும் ஒலிபரப்புதலானது எங்களுடைய தொழுகைக்கு தடையேற்படுத்துகின்றது.'

முஸ்லிம்களுக்கு எதிரான பாரபட்சம்/ஓரங்கட்டல் மற்றும் அச்சுறுத்தல்கள் என்பன தேசிய மட்டத்திலும் அதேபோல அவர்களுடைய நாளாந்த வாழ்விலும் அவர்களுடைய மத சுதந்திரத்திற்கான தடையாகத் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றன என்பதனை இச்சம்பவங்கள் தெளிவாக எடுத்து காட்டுகின்றன.

- **அவர்களுடைய மத வழிபாட்டிடங்கள் மற்றும் வியாபார நிலையங்கள் தாக்குதலுக்குள்ளாதல்**

2018 இற்கு முன்னரும் பின்னரும் வேறுபட்ட பல சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்ட களமட்ட தரவுகளிலிருந்து முஸ்லிம்களின் மத வழிபாட்டிடங்கள் மற்றும் வியாபார நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமையினையும் ஆதனச் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளமையினையும் அறிந்து கொள்ள முடியும். இவ் மோதல்கள் மற்றும் சம்பவங்களைக் கற்கின்றபோது, வெளிநபர்களே மோதல்களை ஆரம்பித்து, ஆதனங்களுக்கு சேதமேற்படுத்தி, கடைகளிலிருந்து பொருட்களைத் திருடுகின்றனர் என்பது தெளிவாகின்றது. குருணாகலிலிருந்து நேர்காணலில் பங்குபற்றியிருந்த ஒருவர், முஸ்லிம்களின் வியாபார நிலையங்களை சேதப்படுத்துவதும் கொள்ளையடிப்பதுமே பிரதான இலக்காகும் என்பதனை வெளிப்படுத்தியிருந்தார். எவ்வாறெனினும்,

இத்தகைய தாக்குதல்கள் மற்றும் ஆதனச் சேதங்களின் காரணமாக முஸ்லிம்களிடையே ஏனையோர் குறித்த பயம் மற்றும் சந்தேகம்/பாதுகாப்பின்மை ஏற்பட்டுள்ளது. நேர்காணலொன்றில் ஒருவர் பின்வருமாறு கூறியிருந்தார்,

“தற்போது கூட சிங்களவர்களாகிய நாங்கள் முஸ்லிம் ஒருவரின் வீட்டிற்கு செல்கின்றபோது அவர்கள் பயப்படுகின்றார்கள். உள்ளூர் சபையொன்றில் சிங்களவர் ஒருவர் கதிரையொன்றில் அமர்ந்திருக்கின்றபோது அதனையடுத்த கதிரையில் முஸ்லிம் நபரொருவர் அமர மாட்டார். அதேபோல சிங்களவரொருவர் முஸ்லிம் ஒருவருக்கு அருகில் அமர மாட்டார்.”

இது இனக் குழுக்களுக்கிடையே மற்றையவர் தொடர்பான பயம், சந்தேகம் மற்றும் பாதுகாப்பற்ற உணர்வு இன்னமும் காணப்படுவதனையே குறிக்கின்றது. இது தனிநபர் சுதந்திரத்தினைத் தடுக்கின்ற அதேவேளை, அது இயல்பாகவே மதத்தினையும் பாதிக்கின்றது.

- **கொவிட் நோய்நிலைமையின்போது முஸ்லிம்களினால் எதிர்கொள்ளப்பட்ட மத சுதந்திரத்திற்கான தடைகள்**

  கொவிட் காலப்பகுதியின்போது முஸ்லிம்களுடைய மத சுதந்திரம் தொடர்பாக பல மாற்றங்கள் ஏற்பட்டன. கொவிட்-19 நோய் நிலைமையினால் இறந்தவர்களின் சடலங்களைக் கட்டாயமாகத் தகனம் செய்ய வேண்டுமென்பது அத்தகையதொரு சவாலாகும். பல ஆர்ப்பாட்டங்களின் பின்னரே முஸ்லிம்கள் தங்களுடைய மத நம்பிக்கைகளின் பிரகாரம் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். குருணாகலையில் செய்யப்பட்ட நேர்காணலொன்றின்போது பதிலிறுத்த பங்குபற்றுநர் ஒருவர் இதனை உறுதிப்படுத்தினார்.

இக்காலப்பகுதியின்போது, முஸ்லிம்கள் கொவிட்-19 இனை பரப்புகின்ற கருவிகளாக உள்ளனர் என்ற சந்தேகம் ஏனைய மத சமுதாயங்களிடையே நிலவியது. வெகுசன ஊடகங்களும் கொவிட் இன் பரவுகை தொடர்பான அத்தகையதொரு அபிப்பிராயத்தினைத் தோற்றுவிப்பதில் ஈடுபட்டிருந்தன.[69] அத்துடன், 2021 இல் Social Indicator[70] இனால் செய்யப்பட்ட ஆய்விலும் இது உறுதி செய்யப்பட்டுள்ளது.

“நாங்கள் கொவிட் காலப்பகுதியின்போது முகக்கவசங்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை பகிர்ந்தளிப்பதற்காக குருணாகல் பிரதேச செயலகத்திற்கு

[69] Moinudeen, S. (2021). Ethno-centric pandemic governance: The Muslim community in Sri Lanka’s COVID response.

[70] “Socio-Economic Index in the Face of COVID-19”, இவ் ஆய்வானது கொவிட்-19 ஆனது எந்தளவிற்கு இலங்கை மக்களின் வாழ்வாதாரம், சுகாதாரம், கல்வி மற்றும் சமூக உறவுகளைப் பாதித்துள்ளது என்பதனை புரிந்து கொள்வதற்காகச் செய்யப்பட்டது- Social Indicator (Centre for Policy Alternatives), 2021

சென்றோம். நான் ஒரு முஸ்லிம் என்று அந்த உத்தியோகத்தர்கள் அறிந்திருக்கவில்லை. 'அருகிலுள்ள முஸ்லிம் கிராமமொன்றில் தடுப்பூசி போடப்படுகின்றது. ஆனால், உங்களுக்கு தெரியாதா- அவர்கள் நிச்சயமற்றவர்கள். அவர்களால் தான் இந்நோய் பரவுகின்றது' என்றார்கள்….''

இச்சமூகத்தில் முஸ்லிம்களின் நடத்தை மற்றும் மத வழக்காறுகள் தொடர்பாக ஏற்கனவே உட்புகுத்தப்பட்டுள்ள நடத்தைப் பாங்குகள் முஸ்லிம்களை குற்றவாளிகளாக்குவதில் பிரதான செல்வாக்கு செலுத்துகின்றன என்பது இக்கற்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய நடத்தை பாங்குகளினால், முஸ்லிம் சமுதாயத்தின் மத சுதந்திரமானது கொவிட் காலப்பகுதியில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டது.

**மத சுதந்திரம் மற்றும் முஸ்லிம் பெண்கள்**

மத சுதந்திரமானது முஸ்லிம் பெண்களை இரு வழிகளில் பாதிக்கின்றது. முதலாவது ஏனைய மத சமுதாயங்கள் முஸ்லிம் பெண்களின் மத சுதந்திரத்தில் செல்வாக்கு செலுத்துகின்றமை ஆகும். இரண்டாவது, பெண்கள் எவ்வாறு தங்களுடைய சொந்த முஸ்லிம் மத சமுதாயத்திற்குள் தங்களுடைய மதத்தினை பின்பற்றுவதற்கான தங்களது இயலுமையினை மட்டுப்படுத்திக் கொண்டுள்ளனர் என்பது தொடர்பானதாகும். ஏனைய மத சமுதாயங்கள் முஸ்லிம் பெண்களை இலக்கு வைக்கின்ற பிரதானமான வழிமுறை ஆடைகள் தொடர்பான அவர்களது தெரிவினூடாக ஆகும். 2021 மார்ச் இல் இலங்கையில் முன்மொழியப்பட்ட புர்காவிற்கான தடையானது மத சுதந்திரத்தின் நேரடியான மீறலொன்றாகும். சர்வமத ஒற்றுமை தொடர்பான நிபுணர்களுடன் செய்யப்பட்ட நேர்காணல்களில், முன்மொழியப்பட்ட புர்கா தடையினால் முஸ்லிம் பெண்கள் எதிர்கொண்ட அசௌகரியங்கள் கீழ்வருமாறு விளக்கப்பட்டது:

> ''சிறு பராயம் முதலே புர்கா அணிவதற்கு பழக்கப்பட்டிருந்த முஸ்லிம் பெண்கள் இவ் புர்கா தடையினால் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகினர். சிறு பராயம் முதலே அவர்கள் புர்கா அணிந்திருந்தமையினால், வேறு உடைகளில் வெளியே செல்வதற்கு அவர்கள் பயந்தனர். இத்தடையினால் தங்களால் வெளியே செல்ல முடியவில்லை என சில வயதான பெண்கள் புலம்பினர்.''

சர்வமத நல்லிணக்கம் தொடர்பாகப் பணியாற்றுகின்ற சிவில் சமூக செயற்பாட்டாளர் ஒருவருடன் நடைபெற்ற நேர்காணலில் சொல்லப்பட்டவைக்கு அமைய, புர்கா அல்லது ஹிஜாப் அணிந்த பெண்கள் பாடசாலைக்கு செல்தல், பணிக்கு செல்தல், சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு செல்தல் அல்லது அத்தியாவசிய சேவைகளைப் பெற்றுக் கொள்ள செல்லல் போன்ற நாளாந்த செயற்பாடுகளில் ஈடுபடுகின்றபோது அவர்களுடைய உடையின் காரணமாக வெறுக்கத்தக்க கருத்துக்கள் மற்றும் பொது பாரபட்சத்திற்கு ஆளாகினர். குருணாகலில் இருந்து பதிலிறுத்த ஒருவர் பின்வருமாறு கூறினார்:

> ''புர்கா அணிந்த பல பெண்கள் இலக்கு வைக்கப்பட்டதுடன், 'கோணிபில்லோ'(பேய் உருவம்)

போன்ற சொற்கள் அவர்களை விவரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டன. நீண்ட, கரிய ஆடைகளின் காரணமாக புர்கா அணிந்த பெண்கள் கோணிபில்லோ என அழைக்கப்பட்டனர். இவ்வகையான ஆடைகளை இங்கு அணியாது அரேபியாவிற்கு சென்று அணியுமாறு அவர்களுக்கு சொல்லப்பட்டது.''

முஸ்லிம் பெண்களினால் எதிர்கொள்ளப்பட்ட மற்றுமொரு சவால் அவர்களுடைய சொந்த மத சமுதாயத்திலேயே ஆண்களுடன் ஒப்பிடும்போது அவர்களுக்கு குறைந்தளவான மத சுதந்திரமே காணப்பட்டது. சமுதாய சட்டங்களுக்கமைய, பெண்கள் பிரார்த்தனைகளுக்காக பள்ளிவாசல்களுக்கு செல்வதிலிருந்தும் மயானங்களுக்கு செல்வதிலிருந்தும் தடுக்கப்பட்டுள்ளனர். மேலும், பெண்கள் தங்களுடைய மாதவிடாய் காலப்பகுதியின்போது எந்தவொரு மத சடங்கினை செய்வதிலிருந்தும் தடுக்கப்பட்டுள்ளனர். இது ஒரு தடையாக அல்லது அனைத்து முஸ்லிம் பெண்களினதும் மத சுதந்திரத்திற்கான தடையாகப் பார்க்கப்படாத போதிலும், இது மாவட்ட மட்ட சர்வமத செயற்பாட்டாளர் ஒருவரினால் முஸ்லிம் பெண்களின் மத சுதந்திரத்திற்கான தடையாக அடையாளங் காணப்பட்டது- ஏனெனில் அவர்களுள் சிலரால் தங்களுடைய உறவினர்களின் மரண சடங்குகளில் கூட கலந்து கொள்ள முடியாதிருந்தது அல்லது அதில் பிரார்த்தனை செய்ய முடியாதிருந்தது. ஆகவே, முஸ்லிம் பெண்களுடைய மத சுதந்திரம் முஸ்லிமாக இருப்பதனாலும் அதேபோல பெண்ணாக இருப்பதனாலும் மட்டுப்படுத்தப்படுகின்றதுடன் அவளது சொந்த சமூகத்திலிருந்தும், அதேபோல, வெளியிலிருந்தும் வருகின்ற சவால்களினால் அச்சுதந்திரம் மேலும் மட்டுப்படுத்தப்படுகின்றது.

தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி சூழ்நிலையில், சிங்கள பௌத்தர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கிடையிலான உறவுநிலையினைப் பற்றிய தற்போதைய உரையாடல் எதிர்மறையானதாகப் பார்க்கப்படவில்லை. அவ்விரு குழுக்களும் பொதுவான காரணமொன்றிற்காக, அதாவது இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிப்பதற்காகப் போராடி வருகின்றன. சிறந்த ஆட்சிக்கான எதிர்பார்ப்பில் இக்குழுக்கள் ஒன்றிணைந்திருப்பது, இலங்கையின் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் இனவாத அரசியலினால் விதைக்கப்பட்ட சில விதைகளும் தோற்றுவிக்கப்பட்ட பாதகநிலைகளும் மறைந்து போவதற்கான சாத்தியமுண்டு என்பதனை உட்கிடையாக வெளிப்படுத்துகின்றன.

### கிறிஸ்தவ சமுதாயம்

கிறிஸ்தவ சமுதாயம் தங்களுடைய மத சுதந்திரத்தினைத் தடுகின்ற பல்வேறுபட்ட சவால்களை நீண்ட காலமாக எதிர் கொண்டு வருகின்றது என்பது நிரூபணமாகியுள்ளது. இது 1994 இலிருந்து கிறிஸ்தவ சமுதாயத்தின் சுதந்திரம் சவாலுக்குட்படுத்தப்பட்ட குறிப்பான சம்பவங்கள் தொடர்பாக இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிஷேஷக ஐக்கியத்துவம் சேகரித்துள்ள தரவுகளிலிருந்து நிரூபணமாகின்றது. எவ்வாறெனினும், அண்மைக்காலங்களில், மத சுதந்திர மீறல்கள் தொடர்பாக முஸ்லிம் சமுதாயம் தேசிய மட்டத்தில் எதிர்கொண்டுள்ள

சவால்கள் மற்றும் தடைகள் மீது ஈர்க்கப்பட்டுள்ள கவனத்துடன் ஒப்பிட்டு பார்க்கின்றபோது, கிறிஸ்தவ சமுதாயத்தின் மத சுதந்திரம் மற்றும் நம்பிக்கைகள் தொடர்பான மீறல்கள் தொடர்பாக தேசிய மட்டத்தில் குறைவான அவதானமே ஈர்க்கப்பட்டுள்ளது. மேலும், 2018 இலிருந்து நடத்தப்பட்ட நேர்காணல்கள் மற்றும் ஆய்வுகள், கிறிஸ்தவர்களுக்கு எதிரான உணர்வுகள் பிராந்திய மட்டத்தில் அதிகளவில் நிலைத்திருப்பதாகக் கூறுகின்றன.

2019 இல் வெளியிடப்பட்ட இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிஷேஷக ஐக்கியத்துவத்தின் அறிக்கையொன்றின்படி, கிறிஸ்தவ சமுதாயத்தின் மத சுதந்திரமானது பல்வேறுபட்ட மீறல்களுக்கு உட்பட்டுள்ளது, அவற்றுள் பெரும்பான்மையானவை தன்மையில் வாய்மொழிமூலமானவையாய்- அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள், பாரபட்சங்கள் மற்றும் சமுதாயத்திற்கெதிரான வெறுப்பு பேச்சு- அமைந்துள்ளன.[71]

இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிஷேஷக ஐக்கியத்துவத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கைகளிலிருந்து பெறப்பட்டுள்ள தரவுகளுக்கமைவாக, பிராந்தியங்களில் உள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸாரினால் கிறிஸ்தவ சமுதாயத்தின் மத சுதந்திரம் அடக்கப்படுகின்றது. பொலிஸ் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சார்பாக நடந்து கொள்வதனையும், பொலிஸாரின் செயற்பாடுகள் பெரும்பாலும் கிறிஸ்தவ சமுதாயத்தின்மீது எதிர்மறையானத் தாக்கத்தினைக் கொண்டிருப்பதனையும் இக்கற்கையின் முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. அத்துடன், பொலிஸ் அதிகாரிகள் சம்பவம் பாரதூரமான தன்மையினைக் கொண்டிராதவிடத்து கிறிஸ்தவ சமுதாயத்தினருக்கு எதிரான மீறல்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையினையும் எடுப்பதில்லை என்றும் இக்கற்கை அறிக்கை வெளிப்படுத்துகின்றது.[72] கிறிஸ்தவ சமுதாயத்தினர் சிறுபான்மையினராக இருக்கின்ற பகுதிகளில் கிறிஸ்தவ சமுதாயத்தினருக்கு எதிராக பாரிய குழுக்களை அணி திரட்டுகின்ற உள்ளூர் பௌத்த பிக்குகளினால் அவர்களுடைய மத சுதந்திரம் மீறப்படுவதற்கான சாத்தியப்பாட்டுத்தன்மை அதிகம் காணப்படுவதாகவும் இவ் அறிக்கை விளக்குகின்றது.

கிறிஸ்தவ சமுதாயத்தினரின் மத சுதந்திரத்தின் மீறல்கள் தொடர்பான விடயங்களில் தலையீடு செய்கின்றபோது, பொலிஸார் உள்ளூர் பௌத்த பிக்குகள் தொடர்பாக பக்கச்சார்புடன் செயற்படுகின்றார்கள் என்பது இக்கற்கைக்கு பதிலிறுத்தவர்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல்களினூடாகத் தெரிய வருகின்றது.

2018 இல் தேசிய சமாதான பேரவையினால் நடத்தப்பட்ட கற்கையானது மத மாற்றத்தினை

---

[71] Schubert, M., 2019. *Restrictions and Violence against Religious Minorities: An Incident Analysis*. [online] Available at: https://www.minormatters.org/storage/app/uploads/public/5d3/7fb/10c/5d37fb10ce12e404095654.pdf

[72] Verité Research. 2021. *Prejudice and Patronage: An Analysis of Incidents of Violence against Christians, Muslims, and Hindus in Sri Lanka (September 2019 – September 2020)*. [online] Available at:

https://www.veriteresearch.org/wp-content/uploads/2021/06/VR_Eng_RR_Mar2021_Prejudice-and-Patronage- An-Analysis-of-Incidents-of-Violence-against-Christians-Muslims-and-Hindus-in-Sri-Lanka.pdf

மத சுதந்திரத்திற்கான பாரிய அச்சுறுத்தலாக அடையாளங் கண்டுள்ளது (இணைப்பில் அட்டவணை 4 இனைப் பார்க்க).[73] மேலும், இக்கற்கையானது மத மாற்றமானது பௌத்தம், இந்து மற்றும் கத்தோலிக்கம் ஆகிய மூன்று மதங்களினாலும் மிகப் பெரிய சவாலாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை வெளிப்படுத்துகின்றது. எவ்வாறெனினும், கிறிஸ்தவ சமுதாயம் மற்றும் முஸ்லிம் சமுதாயம் என்பன மத மாற்றத்தினை தங்களுக்கான பிரச்சினையாக அடையாளப்படுத்துகின்ற போக்கு குறைந்தளவிலேயே உள்ளது (இணைப்பில் வரைபு 5 இனைப் பார்க்க). அத்துடன், அவர்களுடைய சகவிசுவாசிகள் தங்களுடைய மதத்தினை எதிர்காலத்தில் மாற்றிக் கொள்வது தொடர்பாக அவர்கள் கரிசனைக் கொள்கின்றார்களா என கேட்டபோது, பௌத்தம், இந்து மற்றும் கத்தோலிக்க மதங்களைச் சேர்ந்தவர்கள் அது தொடர்பாக அதிகமாகக் கரிசனைக் கொள்வதாகப் பதிலளித்த அதேவேளை, முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மதங்களைச் சேர்ந்தவர்கள் அந்தளவிற்கு கரிசனை உள்ளதாகக் கூறவில்லை (இணைப்பில் வரைபு 6 இனைப் பார்க்க). இக்கற்கைக்காக செய்யப்பட்ட நேர்காணல்கள் கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்கள் பிராந்திய மட்டத்தில் மத மாற்றத்திற்காக குற்றம் சாட்டப்படுகின்றார்கள் என்பதனை வெளிப்படுத்துகின்றன. அவர்களுள், இக்கற்கையில் பங்குபற்றிய கிறிஸ்தவ போதகர்கள் இக்குற்றச்சாட்டு மிகவும் பொதுவானது என்பதுடன், இது சுவிஷேஷகம் மற்றும் நற்செய்திகளைத் தவறாக புரிந்து கொண்டுள்ளதன் அடிப்படையில் செய்யப்படுவதென கூறினார்கள்.[74]

பதிலிறுப்பவரொருவருடனான நேர்காணலானது ஏனைய மத குழுக்களுக்கிடையே கிறிஸ்தவ சமுதாயம் மற்றும் அவர்களின் எண்ணங்கள் தொடர்பான பயம் இருப்பதனை வெளிப்படுத்தியது. கிறிஸ்தவ போதகர் ஒருவருடனான நேர்காணலும் கிறிஸ்தவத்திற்கு மதம் மாற்றுதல் தொடர்பான இப்பிரச்சினை நகர்ப் பகுதிகளை விட கிராமப்புற பகுதிகளில் மிகவும் பொதுவானது என்பதனை உறுதிப்படுத்தியது. அத்துடன் பௌத்தர்கள், இந்துக்கள் மற்றும் றோமன் கத்தோலிக்கர்களும் மத மாற்றம் காரணமாக கிறிஸ்தவ சமூகம் தொடர்பான அசௌகரியமான உணர்வுகளைக் கொண்டுள்ளதாக நேர்காணலொன்றில் கூறப்பட்டது.

எவ்வாறெனினும், கிறிஸ்தவ மதகுருமாருடன் நடத்தப்பட்ட நேர்காணல்களின்போது, அவர்கள் வேறு மத குழுக்களைச் சேர்ந்தவர்களை பலம் அல்லது செல்வாக்கினைப் பயன்படுத்தி கிறிஸ்தவத்திற்கு மாற்றுவதனை எதிர்ப்பதாகக் கூறியதுடன் அவ்வாறு செய்யுமாறு ஏனைய கிறிஸ்தவ மதகுருமாரையும் ஊக்கப்படுத்தியுள்ளதாகக் கூறினார்கள். மேலும், பல சந்தர்ப்பங்களில், கிறிஸ்தவ தேவாலயங்கள் கிறிஸ்தவமல்லாதவர்களுக்கு பொருள்சார் நன்மைகளை வழங்குவதனூடாக அவர்களை கிறிஸ்தவத்திற்கு மாற்ற முயற்சிப்பதில்லை

[73] National Peace Council – Religious Freedom Index (2018)

[74] The gospel is explained in the Bible. Accordingly, the message related to God's work for the salvation of mankind centered on Jesus Christ's sacrifice of his life on the cross and resurrection from death. Religion Wiki. n.d. *Good News (Christianity)*. [online] Available at: https://religion.fandom.com/wiki/Good_news_(Christianity)

என்றும், மாறாக, அவர்களுடைய மதம், நம்பிக்கைகள் மற்றும் மத போதனைகளின் பிரதான பகுதியாக ஏனையோருக்கு உதவுதல் காணப்படுவதனால், அவர்கள் ஏனையோருக்கு உதவுகின்றார்கள் என்றும் கூறப்பட்டது.

இப்பின்னணியில், கிறிஸ்தவ சமுதாயத்தின் மத சுதந்திரமானது பின்வரும் வழிகளில் தடுக்கப்படுகின்றது:

- ***அவமதிப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள்***

கிறிஸ்தவ சமுதாயம் எதிர்கொள்கின்ற அவமதிப்புக்கள் மற்றும் விமர்சனங்களுக்கான முதன்மையான காரணங்களுள் ஒன்று மத மாற்றம் ஆகும். இதனை விளக்கிய கிறிஸ்தவ போதகர் ஒருவர், கொவிட் காலப்பகுதியின்போது அவர்கள் கஷ்டமான குடும்பங்களுக்கு உதவ முன்வந்தபோதும் மற்றும் தற்போதைய எண்ணெய்/ எரிவாயு நெருக்கடியினால் நீண்ட வரிசைகளில் காத்திருந்த மக்களுக்கு உணவு/பானங்களை வழங்க முன்வந்தபோதும் அவர்களுடைய நல்லெண்ணம் மத மாற்றத்திற்கான முயற்சியாகப் பார்க்கப்பட்டதுடன் அவர்கள் நிந்திக்கப்பட்டார்கள். மத மாற்றத்துடன் தொடர்புடைய கடிந்துரைகள் குறித்து கதைக்கின்றபோது, மலையக தமிழ் சமுதாயத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஒருவர், அவருடைய பகுதியில் வசிக்கின்ற பல இந்துக்கள் கிறிஸ்தவத்திற்கு மாறுவதாகவும் அவ்வாறு கிறிஸ்தவத்திற்கு மாறியவர்கள் கிறிஸ்தவ போதனைகளை செய்வார்களாயின், அவர்களை கடிந்துரைப்பதற்காக அல்லது அச்சுறுத்துவதற்காக இந்துக்கள் ஒன்றிணைவார்கள் என்றும் கூறினார்.

கிறிஸ்தவர்கள் நிந்திக்கப்படுகின்ற மற்றுமொரு சந்தர்ப்பம் அவர்கள் சுவிஷேஷகம் அல்லது நற்செய்தியினைப் பரப்புவதற்காக தூர கிராமங்களுக்கு செல்கின்ற சந்தர்ப்பம் ஆகும். வவுனியா மாவட்டத்திலிருந்து ஒருவர் கூறுகின்றபோது, கிராமங்களுக்கு செல்கின்றபோது கிறிஸ்தவ சமுதாயத்தினர் அச்சிடப்பட்ட துண்டுபிரசுரங்களை பகிர்ந்தளிப்பதனாலும் நிந்தனைக்கு உட்படுகின்றனர் என கூறினார்.

சில கிராமங்களில் வாழ்கின்ற கிறிஸ்தவ சமுதாயத்தினர் அந்நியர்களை கிராமத்திற்கு அழைத்து வருகின்றனர் என்ற குற்றச்சாட்டின் காரணமாகத் தாக்குதலுக்கு ஆளாகின்றனர் என இக்கற்கை வெளிப்படுத்துகின்றது. குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் போதகர்கள் கிறிஸ்தவர்களின் வீடுகளுக்கு பிரார்த்தனை செய்வதற்காக வருகை தருகின்றார்கள் என்றும் இது மாதத்தில் பல தடவைகள் இடம்பெறும் என்றும் சில சமயங்களில் பரிச்சயமல்லாத குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நபர்கள் ஒன்று கூடுவார்கள் என்றும் மற்றுமொருவர் குறிப்பிடுவார். அக்கிராமத்திலுள்ள வேறு மதக் குழுக்களைச் சேர்ந்த நபர்கள் கிறிஸ்தவர்கள் அந்நியர்களைக் கிராமத்திற்கு அழைத்து வருவதாக குற்றம் சாட்டுகின்றனர். இவர்களை சந்தேகமாகப் பார்ப்பதற்கு இந்நடைமுறை வேறு மதங்களின் நடைமுறைகளிலிருந்து வேறுபட்டதாக இருப்பதே காரணமென பதிலிறுப்பவர்கள் தெரிவித்தார்கள்.

கிறிஸ்தவர்களுக்கு எதிராக செய்யப்படுகின்ற மற்றுமொரு விமர்சனம் அவர்கள் ஒரு கிராமத்தில்

ஒன்றிற்கும் மேற்பட்ட தேவாலயங்களைக் கொண்டுள்ளனர் என்பதாகும். வட மாகாணத்திலிருந்து பங்குபற்றிய ஒருவர் இது தொடர்பாகக் கருத்து தெரிவித்திருந்தார்- கிறிஸ்தவத்தில் ஒன்றிற்கும் மேற்பட்ட பிரிவுகள் காணப்படுகின்றன, இப்பிரிவுகளுக்கிடையிலான வேறுபாடுகளை அறியாத மக்கள் கிறிஸ்தவர்கள் ஒன்றிற்கு மேற்பட்ட தேவாலயங்களைக் கொண்டிருப்பதாகவும் கிராமத்தை கிறிஸ்தவமயமாக்க முயற்சிப்பதாகவும் குற்றம் சாட்டுவதாக இவர் தெரிவித்திருந்தார்.

இக்கற்கையில் அறிக்கையிடப்பட்ட ஏனைய விமர்சனங்களாக கிறிஸ்தவ மத கொண்டாட்டங்களின்போது ஏற்படுகின்ற சத்தத்தின் காரணமாக ஏனைய மத குழுக்கள் கிறிஸ்தவ சமுதயாத்தினரை கடிந்து கொள்தல் அமைகின்றது. இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த ஒருவர், கிறிஸ்தவ மதக் குழுக்கள் தங்களுடைய கொண்டாட்டங்களை பெரும்பாலும் தங்களுடைய வீடுகளிலே செய்வதாகவும், அக்கொண்டாட்டங்களில் (மத சடங்குகளில்) இசை கருவிகளைப் பயன்படுத்துதல் ஒரு முக்கிய அம்சமாகக் காணப்படுவதனாலும்- அச்சத்தங்களே ஏனைய மத குழுக்கள் கிறிஸ்தவர்களை நிந்திப்பதற்கான முக்கிய காரணமாக அமைந்துள்ளது என கூறினார்.

- **பாரபட்சம்**

கிறிஸ்தவ சமுதயாத்தினரால் அவர்களுடைய மத சுதந்திரம் தொடர்பாக எழுப்பப்பட்ட மற்றுமொரு குற்றச்சாட்டு அவர்களது மத அடையாளத்தின் காரணமாக அவர்கள் பாரபட்சப்படுத்தப்படுகின்றமை தொடர்பானதாகும். இது தொடர்பாக கருத்து தெரிவித்த பதிலிறுப்பவர் ஒருவர் இதனை விளக்குவதற்கான உதாரணமாக பிள்ளைகளுக்கான பாடசாலை அனுமதியினை குறிப்பிட்டார். கிறிஸ்தவ பிள்ளையொன்றினை கத்தோலிக்க பாடசாலையொன்றில் சேர்க்கின்றபோது அப்பிள்ளையின் மத அடையாளம் அங்கு தலையீடு செய்வதாக அவர் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

> “எங்களுடைய பிள்ளையை கத்தோலிக்க பாடசாலையொன்றில் அனுமதிப்பதற்கான நேர்காணலில், விண்ணப்பமானது அங்கும் இங்கும் மாற்றப்பட்டது. நாங்கள் எங்களுடைய பிள்ளையினை அப்பாடசாலையில் சேர்க்க வேண்டுமாயின் நாங்கள் கத்தோலிக்க மதத்திற்கு மாற வேண்டுமென அவர்கள் சொன்னார்கள்…”

அத்துடன், ஏனைய மதகுருமாருடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது கிறிஸ்தவ மதகுருமார் அவர்களுடைய மத அடையாளத்தின் காரணமாகப் பொது இடங்களில் பாரபட்சத்திற்கு ஆளாவதாக இக்கற்கை வெளிப்படுத்துகின்றது. பதிலிறுப்பவர் ஒருவர் கூறியமைக்கமைய,

> “நாங்களும் எங்களுடைய ஆடை முறைமைகளும் கத்தோலிக்க மதத் தலைவர்கள் பெற்றுக் கொள்கின்ற அதேமாதிரியான நடத்துகையினைப் பெற்றுக் கொள்வதில்லை. அத்துடன், நாங்கள் வருவதாக கூறினால் சில பௌத்த பிக்குகள் மற்றும் பாதிரியார்கள் சர்வமத நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கு கொள்ள மாட்டார்கள். நாங்கள் வந்தால், அத்தகைய பிக்குகள் மற்றும் பாதிரியார்கள் அந்நிகழ்ச்சியில் பங்கு கொள்வதில்லை என நேரடியாகவே சொல்வார்கள்….”

இதற்கப்பால், புதிய மத வழிபாட்டிடங்களை அமைத்து கொள்வது தொடர்பில் கிறிஸ்தவர்கள் பாரபட்சத்திற்கு ஆளாகின்றனர். இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த பதிலிறுப்பவர்கள், அத்தகைய சந்தர்ப்பங்களில் றோமன் கத்தோலிக்க தேவாலயங்களும் பௌத்த விகாரைகளும் இணைந்து அத்தகைய புது மத வழிபாட்டிடங்களுக்கெதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்கின்றனர். புதிய புண்ணிய சன்னிதிகளின் தாபிப்பு தொடர்பாகக் கருத்து தெரிவிக்கின்றபோது, கிறிஸ்தவ குழுக்கள் புதிய மத இடங்களைத் தாபிப்பதிலிருந்து அவர்களைத் தடுக்கும் பொருட்டு பௌத்த சமூகம் 2008 சுற்றுநிரூபத்தினைப் பயன்படுத்துவதாக மற்றுமொரு நபர் கூறினார். அத்துடன் மத்திய மாகாணத்திலிருந்து வந்த ஒருவர் அவ் ஏற்பாடுகளை உள்ளூரதிகார சபைகளும் முறைகேடாகப் பயன்படுத்துவதாகக் குறிப்பிட்டார்.

- **சமூகத்தில் உருவாக்கப்பட்டுள்ள எதிர்மறையான சித்தாந்தங்களுக்கு உட்படல்**

கிறிஸ்தவ சமுதாயம் மத சுதந்திரம் தொடர்பாக எதிர்கொள்கின்ற மற்றுமொரு தடை யாதெனில், சமூகத்தில் உருவாக்கப்பட்டுள்ள எதிர்மறையான சித்தாந்தங்களை அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருத்தலாகும். பிரதானமாக கிறிஸ்தவ சமுதாயமானது ''மத வெறியர்கள்'' மற்றும் ''அடிப்படைவாதிகள்'' என அடையாளப்படுத்தப்படுகின்றது. இதற்கான பிரதான காரணமாக பதிலிறுப்பவர்களால் சொல்லப்பட்டது யாதெனில், அவர்களது குணப்படுத்துகின்ற சேவைகளும் ஏனைய சேவைகளும் ஆகும். அத்தகைய குணப்படுத்துகின்ற சேவைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றபோது, கிறிஸ்தவ பிரிவுகளிடையே கூட குணப்படுத்துகின்ற சேவைகளின் தன்மை குறித்த உடன்பாடின்மைகள் காணப்படுவதாக சில கிறிஸ்தவ போதகர்கள் கூறியிருந்தார்கள். அத்துடன் சில கிறிஸ்தவ தேவாலயங்களின் செயற்பாடுகளும் இத்தகைய அடையாளப்படுத்துகைக்கு காரணமாக அமைவதாகக் குறிப்பிடப்பட்டது.

கிறிஸ்தவ பிரிவுகள் தொடர்பாக இச்சமூகம் கொண்டுள்ள மற்றுமொரு எதிர்மறையான எண்ணம் யாதெனில் அவர்கள் நீண்ட-கால இருப்பினை உத்தரவாதப்படுத்தமுடியாத மதக் குழு வகையொன்றாகும் என்பதுடன் அவர்களிடம் உறுதியான நிறுவனக் கட்டமைப்பு இல்லை என்பதாகும். பதிலிறுப்பவர் ஒருவர் பின்வருமாறு கூறினார்:

> ''கிறிஸ்தவ தேவாலயங்கள் காளான்களைப் போல வளர்கின்றன. ஒரு குழுவொன்று உள்ளதென எண்ணுவோம். அக்குழுவிலுள்ள ஒருவர் அக்குழுவின் அபிப்பிராயத்தினை விட வேறுபாடான அபிப்பிராயமொன்றைக் கொண்டிருக்கின்றபோது, அவர் அக்குழுவினைவிட்டு வெளியேறி மற்றுமொரு குழுவினை ஆரம்பிக்கின்றார். கிறிஸ்தவ தேவாலயங்களின் விசித்திரம் யாதெனில் அவர்கள் இதுபோல பிரிந்து கொண்டேயிருப்பார்கள்…''

கிறிஸ்தவ தேவாலயங்கள் தொடர்பாக சமூகத்தில் நிலைத்திருக்கின்ற மற்றுமொரு எதிர்மறையான அபிப்பிராயம் யாதெனில் அத் தேவாலயங்கள் நிதி நோக்கங்களுக்காகப் பேணப்படுகின்றன என்பதாகும். கிறிஸ்தவ பிரிவுகளில் பணம் சேகரிக்கப்படுகின்றமை

தொடர்பாகக் கருத்து தெரிவித்த பதிலிறுப்பவர்கள் அது ஏனைய மத நடைமுறைகளைக் காட்டிலும் வேறுபாடானதாக இருப்பதாகவும், இது தொடர்பாக ஏனைய மத குழுக்களிடையே தவறான புரிந்துணர்வுகளை ஏற்படுத்துவதாகவும் குறிப்பிட்டனர். கிறிஸ்தவ தேவாலயங்கள் வெளிநாட்டு உதவியினை அதிகளவில் பெற்றுக் கொள்கின்றன என்பதும் மற்றுமொரு விடயமாக அமைந்துள்ளது. எவ்வாறெனினும், இக்கற்கையில் பங்குபற்றிய கிறிஸ்தவ போதகர்களால் சொல்லப்பட்டதற்கமைய, அவர்கள் செய்கின்ற சமூக சேவைக்கு அவசியமான நிதி உதவியானது அவர்களுடைய சக விசுவாசிகளின் அன்பளிப்புக்களினூடாகவே பெறப்படுகின்றது

இறுதியாக, கிறிஸ்தவர்களால் எதிர்கொள்ளப்படுகின்ற அவர்களுடைய மத சுதந்திரத்திற்கான தடைகள் அவர்களுடைய நடைமுறைகளை பிராந்திய மட்டங்களிலுள்ள ஏனைய மதங்களை பின்பற்றுபவர்கள் தவறாகப் புரிந்து கொண்டுள்ளதன் விளைவாக ஏற்படுகின்றன என்பதுடன் மத நடைமுறைகளுக்கிடையிலான முரண்பாடுகளும் இதற்கான காரணமாக அமைகின்றன. மதப் பரப்புரை தொடர்பாகக் காணப்படுகின்ற சந்தேகமே இதற்கான பிரதான காரணமாக இருக்கின்ற அதேவேளை, இது தொடர்பான கிறிஸ்தவ பிரிவுகளின் பதிலிறுப்புக்களும் சவாலுக்குட்பட்டதாகவே உள்ளன, ஏனெனில் மதம் பரப்புரை செய்யப்பட வேண்டிய வழிமுறை தொடர்பில் குறிப்பிட்ட சில பிரிவுகளிடையேயும் உடன்பாடின்மைகள் காணப்படுகின்றன. எவ்வாறெனினும், வாய்மொழிமூல துஷ்பிரயோகம் என்பது கிறிஸ்தவ சமுதாயத்தினரின் மத சுதந்திரத்திற்கான பிரதான தடையாகியுள்ளதுடன் இது அம் மத சமுதாயத்தின் மத சுதந்த்திரத்தின்மீது மட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டுள்ளன.

## இந்து சமுதாயம்

தேசிய சமாதான பேரவையினால் 2018 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மத சுதந்திரம் தொடர்பான கற்கையானது தங்களுடைய மத சுதந்திரம் தொடர்பாக அதிகமாகக் கரிசனைக் கொள்கின்ற மூன்று மத சமுதாயங்களுக்குள் ஒன்றாக இந்து சமுதாயம் அமைகின்றது என்பதனை வெளிப்படுத்துகின்றது. அக் கற்கைக்கமைய இந்து சமுதாயமானது ஏனைய மத குழுக்களைவிட தங்களது மத மற்றும் கலாசார நிலைப்பாடு தொடர்பாக மிகவும் கவலையடைகின்றது (இணைப்பில் அட்டவணை 1 இனைப் பார்க்க). அத்தகைய கரிசனையினை வெளிப்படுத்திய 49% ஆன இந்துக்கள் மதமாற்றமே அவர்களது பிரதான கரிசனை என கூறியிருந்தனர் (இணைப்பில் விளக்கப்படம் 5 இனைப் பார்க்க). கற்கையின் மற்றுமொரு கண்டுபிடிப்பாக அமைந்தது ஏனைய மதக் குழுக்களுடன் ஒப்பிடுகின்றபோது இந்துக்கள் எதிர்காலத்தில் தங்களுடைய மதம் மற்றும் கலாசாரம் தொடர்பான பாதுகாப்பற்ற உணர்வினையே கொண்டுள்ளனர். இதனை ஏற்றுக் கொள்கின்ற பல இந்துக்கள் தங்களுடைய மதக்குழுவிலுள்ள மக்கள் எதிர்காலத்தில் சட்ட மற்றும் ஒழுங்கு நிறுவனங்களினால் சமமாக நடத்தப்பட மாட்டார்கள் (33%), தேசிய மட்ட அரசியலில் உள்வாங்கப்பட மாட்டார்கள் (33%) மற்றும் கிரமமாக ஏனைய மதங்களுக்கு மாறிவிடுவார்கள் (29%) என நம்புகின்றார்கள் (இணைப்பிலுள்ள அட்டவணை 2

இனைப் பார்க்க).

இந்து சமுதாயத்தின் மத சுதந்திரம் மீறப்படுகின்ற அளவு மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுவதாக வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் நடத்தப்பட்ட நேர்காணல்கள் வெளிப்படுத்துகின்றன. இதற்கான காரணம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மத்திய மாகாணம் மற்றும் ஏனைய பகுதிகளில் காணப்படுகின்ற இந்துக்களின் மத-கலாசார நடைமுறைகளில் காணப்படுகின்ற குறிப்பிட்ட சில வேறுபாடுகளாகும்.

இந்துக்களின் மத சுதந்திரத்திற்கு கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் அதேபோல பௌத்தர்களினால் அச்சுறுத்தல் நிலவுவதாகவும், ஆனால், இக்குழுக்களினால் ஏற்படுத்தப்படுகின்ற சவால்கள் ஒன்றிலிருந்து ஒன்று பாரியளவில் வேறுபட்டிருப்பதாகவும் நேர்காணல்கள் வெளிப்படுத்துகின்றன. நேர்காணல்களினால் வெளிப்படுத்தப்பட்ட மற்றுமொரு முக்கிய விடயம் யாதெனில் இந்து சமுதாயத்தின் அதிகளவான அங்கத்தவர்கள் றோமன் கத்தோலிக்க சமுதாயத்தினரை தங்களுடைய மத சுதந்திரத்திற்கான அச்சறுத்தலாகக் கருதவில்லை. இந்து மற்றும் றோமன் கத்தோலிக்க மதங்களின் நடைமுறைகளுக்கிடையே காணப்படுகின்ற பொதுத்தன்மை மற்றும் காலத்தோடு இணைந்து அவர்கள் எவ்வாறு ஒத்திருக்க ஆரம்பித்தார்கள் போன்ற விடயங்கள் இவ் உணர்விற்கான அடிப்படையாக அமைகின்றது. இவ்விடயத்தினை மீள உறுதி செய்கின்றவகையில், பதிலிறுப்பவர் ஒருவர், கத்தோலிக்கர்கள் மற்றும் இந்துக்கள் ஆகிய இருசாராரும் வாழ்கின்ற இடங்களில் இவ்விரு மதங்களினதும் நடைமுறைகளின் பரஸ்பர ஒன்றித்த தன்மையினைக் காண முடியுமென கூறினார். உதாரணமாக, இந்துக்கள் வாழ்கின்ற இடங்களில் வாழ்கின்ற கத்தோலிக்கர்கள் சாதி முறைமையினை ஏற்றுக் கொள்வார்கள் என்பதுடன் கத்தோலிக்க தேவாலயங்களுக்கு பூசப்பட்டிருக்கின்ற நிறப்பூச்சின் நிறத்தைக் கொண்டு அத்தேவாலயம் எச்சாதிக்கு சொந்தமானது என்பதனை கூற முடியும். அத்துடன் மணப்பெண்ணின் கழுத்திற்கு செயின் (தாலி) போடுகின்ற இந்து சடங்குகள் கத்தோலிக்க திருமணங்களிலும் இடம்பெறுமென்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது. அதற்கமைய, ஏனைய மத சமுதாயங்களுடன் ஒப்பிட்டு பார்க்கின்றபோது இந்து மற்றும் கத்தோலிக்க சமுதாயங்களுக்கிடையில் ஒற்றுமையும் ஒன்றையொன்று தங்கியிருக்கின்ற தன்மையும் காணப்படுகின்றதென உட்கிடையாக அறிய முடிகின்றது.

இத்தகைய பின்னணியில், இந்து சமுதாயத்தின் மத சுதந்திரமானது கீழ்வரும் வழிகளில் தடுக்கப்படுகின்றது:

- **மத மாற்றம்**

இந்துக்களின் மத சுதந்திரத்திற்கு மத மாற்றமே பாரிய தடையாக உள்ளதாக பெரும்பாலான நேர்காணல்கள் அடையாளப்படுத்தியிருந்தன. இந்துக்கள் பெரும்பாலும் கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம்களினால் மத மாற்றம் செய்யப்படுவதாக கூறப்பட்டது. மலையக தமிழ் சமுதாயம் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள இந்துக்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல்களில் அவர்களுடைய மதக் குழுவிலுள்ளவர்கள் கிறிஸ்தவத்திற்கு மாற்றப்படுவதற்கு வழிவகுக்கின்ற சில

முதன்மையான காரணிகள் குறித்து குறிப்பிட்டிருந்தனர். முதலாவது காரணி, இந்து சமூகத்தில் காணப்படுகின்ற சாதி பிரிவுகள் ஆகும்- இவை அவர்கள் சமூக அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான தடையாக உள்ளது. பெரும்பாலான கிறிஸ்தவ தேவாலயங்கள் சாதியினை அடிப்படையாகக் கொண்ட பாரபட்சத்தினை நிராகரிக்கின்றது என்ற கருத்தினை பதிலிறுப்பவர்கள் கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பினைச் சேர்ந்த பதிலிறுப்பவர் ஒருவர், கிறிஸ்தவர்கள் ஏனையோரை அழைக்கின்ற முறைமை ("சகோதரன்/சகோதரி") மற்றும் அம்மதத்தினால் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தலைமைத்துவ பதிவகள் என்பன இந்து சமுதாயத்தினைச் சேர்ந்த தாழ்ந்த சாதி அங்கத்தவர்களை அதிகளவில் ஈர்க்கின்ற விடயமாக அமைந்திருப்பதாக கூறினார். இந்திய வம்சாவழியினரான தமிழர் சமுதாயத்தின் வசிப்பிடமான மத்திய மாகாணத்தில் நடத்தப்பட்ட நேர்காணல்களில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின்படி, தங்களுடைய மதத் தலைவர்களிடமிருந்து கிடைக்காத பொருள்சார் நன்மைகள் கிறிஸ்தவ பிரிவுகளிலிருந்து கிடைக்கின்றமையானது இந்துக்கள் கிறிஸ்தவத்தை தழுவிக் கொள்வதற்கான தூண்டலை வழங்கியுள்ளது.

மட்டக்களப்பினைச் சேர்ந்த ஒருவருடன் நடத்தப்பட்ட நேர்காணலில் கிழக்கு மாகாணத்தில் உள்ள இந்துக்கள் இஸ்லாம் மதத்தினைத் தழுவிக் கொள்கின்ற போக்கு காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. அம்பாறை மற்றும் கல்முனை போன்ற பகுதிகளில் இந்து சமுதாயத்தினர் பலர் இஸ்லாமிற்கு மாறுகின்ற இரண்டு வழிமுறைகளை அவதானிக்க முடிவதாக அவர் கூறினார். ஒரு புறம் இந்து பெண்கள் முஸ்லிம் ஆண்களைத் திருமணம் செய்து கொண்டு இஸ்லாத்திற்கு மாறுகின்றனர்- மறு புறத்தில் முஸ்லிம் வியாபாரத்தின் விரிவாக்கம் மற்றும் முஸ்லிம் வியாபாரங்களின் வெற்றி என்பன இஸ்லாத்திற்கு மாறுவதற்கான ஈர்ப்பினை உருவாக்கியுள்ளது.

- **பௌத்தமயமாக்கம்**

நேர்காணல்களினால் அவதானிக்கப்பட்ட, இந்துக்களுக்கான மத சுதந்திரத்தினைத் தடுக்கின்ற மற்றுமொரு தடை யாதெனில், இந்துக்கள் வாழ்கின்ற இடங்களில் புத்தர் சிலைகளைத் தாபித்தலாகும். புத்தர் சிலைகளைத் தாபித்தலை பௌத்த கலாசாரத்தைப் புரப்புகின்ற ஒரு முயற்சியாக இந்து சமுதாயத்தினர் பார்க்கின்றனர். இச்சூழ்நிலையானது அப்பகுதிகளிலுள்ள இந்து மதம் மற்றும் கலாசாரத்தில் தாக்கம் செலுத்துமென இந்துக்கள் அச்சம் கொள்வதாகக் கலந்துரையாடல்களில் அறிக்கையிடப்பட்டது. பதிலிறுப்பவர் ஒருவர் பின்வருமாறு கூறினார்:

> "இந்துக்கள் வழிபாட்டிற்காகக் கதிர்காமம் செல்கின்றபோது செய்கின்ற குற்றச்சாட்டுக்களுள் இதுவும் ஒன்றாகியுள்ளது. அங்கு இந்து கலாசாரத்தைவிட பௌத்த கலாசாரமே ஆதிக்கம் செலுத்துகின்றது. அத்துடன், வட மாகாணத்தில் புத்தர் சிலைகளைத் தாபிப்பதனால் இந்து கலாசாரம் அழிக்கப்பட்டு விடுமென வட மாகாணத்தில் வாழ்கின்ற இந்துக்கள் அச்சம் கொள்கின்றனர்."

திருகோணமலை மற்றும் பொத்துவில் போன்ற பகுதிகளில் பௌத்தர்கள், இந்துக்கள் பல

வருடங்களாக வழிபட்டு வந்த இடங்களில் எதேச்சாதிகாரமாக புத்தர் சிலைகள் மற்றும் அரச மரங்களைத் தாபித்துவிட்டு அவற்றை பௌத்த புண்ணிய சன்னதிகளாக அழைப்பதாக மட்டக்களப்பினைச் சேர்ந்த பதிலிறுப்பவர் ஒருவர் கூறினார். அதேபோன்று, மலையக தமிழ் சமுதாயத்தினைச் சேர்ந்த பதிலிறுப்பவர் ஒருவர் இந்து சமுதாயத்தினர் வாழ்கின்ற ஊவா மாகாணத்தில் சிங்கள பௌத்தர்களின் மீள்குடியேற்றங்கள் அதிகரித்துள்ளமையானது இந்துக்களின் மத சுதந்திரத்திற்கான அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டார். மேலும், சிங்கள மக்கள் வடக்கு மற்றும் கிழக்கில் ஒரு சில இடங்களில் குடியேற்றப்படுவதாலும் இத்தகைய விளைவுகள் ஏற்படலாமென கலந்துரையாடல்களில் வெளிப்படுத்தப்பட்டது.

- **பாரபட்சத்திற்கு உள்ளாகுதல்**

வவுனியா மாவட்டத்தினைச் சேர்ந்த பதிலிறுப்பவர் ஒருவர், இந்து சமுதாயத்தினரும் தொல்பொருள் திணைக்களம் மற்றும் இராணுவம் போன்ற அரசாங்க அதிகாரிகள் மீதான நம்பிக்கை தொடர்பானப் பிரச்சினைகளைக் கொண்டுள்ளனர் என குறிப்பிட்டார். இத்தகைய அதிகாரிகள் மத சுதந்திரத்தின் மீறல்கள் போன்ற உரிமை மீறல்களைப் பாதுகாக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டாலும் அவர்கள் சிங்கள பௌத்தர்களின் அக்கறைகளையே பிரதிநிதித்துவப்படுத்துவதாக இந்து சமுதாயத்தினர் எண்ணுகின்றனர். இக்கற்கையின் பதிலிறுப்பவர் ஒருவர் கீழ்வருமாறு கூறினார்,

> *“இந்து தொல்லியல் இடங்கள் தொடர்பாக தொல்பொருள் திணைக்களம் அக்கறை கொள்வதில்லை என இந்துக்கள் எண்ணுகின்றனர்…தொல்பொருள் திணைக்களமானது பௌத்த தொல்லியல் இடங்கள் தொடர்பாக மாத்திரமே அக்கறை கொண்டுள்ளது. சில நேரங்களில் இந்துக்கள் தொல்பொருள் திணைக்களத்தினர் குறிப்பிட்ட சில இந்து ஆலயங்களை பௌத்த மரபுரிமையாக மாற்றுவதற்கு முயற்சிக்கின்றார்கள் என குற்றம் சாட்டுகின்றார்கள்.”*

மட்டக்களப்பினைச் சேர்ந்த பதிலிறுப்பவர் ஒருவர் கூறியதற்கமைய, கிழக்கு மாகாணத்திலுள்ள இந்து சமுதாயத்தினர் இந்துக்கள் வாழ்கின்ற இடங்களில் பௌத்த வழிபாட்டிடங்களைக் கட்டுவதற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கு பெரும்பாலும் தயங்குகின்றனர், ஏனெனில், பௌத்த சமுதாயம் இராணுவத்தினால் பாதுகாக்கப்படும் என அவர்கள் நம்புகின்றார்கள்.

- **சிவ சேனாவின் ஆதிக்கம்**

இந்து சமுதாயத்தில் இந்திய ஆதிக்கத்தின் பரவல் அவர்களுடைய மத சுதந்திரத்தினை எதிர்காலத்தில் செல்வாக்கிற்குட்படுத்துமென்பது செய்யப்பட்ட நேர்காணல்களிலிருந்து தெளிவாகத் தெரிகின்றது. சிவ சேனா குழுவானது யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் வவுனியா போன்ற இடங்களில் பிரசன்னமாயிருப்பதாக பங்குபற்றிய பலர் குறிப்பிட்டிருந்தனர். சிவ சேனா குழுவானது இந்தியாவின் மகாராஷ்டிராவில் அதேபேரில் இயங்குகின்ற வலது சாரி இந்து

அமைப்புடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருப்பதாக கூறப்படுகின்றது. இந்தியா முழுவதும் குறிப்பிடத்தக்களவான பலமான பிரசன்னத்தைக் கொண்டுள்ள மற்றுமொரு வலதுசாரி இந்து அமைப்பான ரஸ்திரிய ஸ்வயம்சேவக் சங் (RSS) இனை ஆதரிக்கின்ற தரப்புக்களினால் ஊக்குவிக்கப்படுகின்ற 'இந்துத்துவத்தின்'[75] ஆதிக்கத்துடனும் இச்சித்தாந்தம் தொடர்புற்றுள்ளது. மலையக சமுதாயத்திலிருந்த ஒருவர் கூறுகின்றபோது, நாட்டில் இந்து சமுதாயத்தில் சிவ சேனாவின் ஆதிக்கம் அதிகரிக்கின்றமையானது இலங்கையரின் இந்து அடையாளத்திற்கு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை ஏற்படுத்துமென கூறினார். இச்சித்தாந்தத்தின்கீழ் சிவன் மற்றும் விஷ்ணு ஆகிய கடவுள்களை வணங்குதல் மாத்திரமே ஊக்குவிக்கப்படுவதாகவும், ஆனால் இலங்கையிலுள்ள இந்துக்கள் மிக நீண்ட காலமாக வைரவர் மற்றும் கதிர்காமக் கந்தர் ஆகிய கடவுள்களையும் வணங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். இத்தகைய செல்வாக்கு இலங்கை இந்துக்களின் மத சுதந்திரத்தினையும் மதத்தினை பின்பற்றுவதற்கான அவர்களது இயலுமையினையும் மட்டுப்படுத்தலாமென நேர்காணல்களில் சுட்டிக்காட்டப்பட்டது. மறுபுறத்தில், சிவ சேனா போன்ற அமைப்புக்களின் பிரசன்னம் வட மாகாணத்தினைவிட கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் வாழ்கின்ற இந்துக்களுக்கு பாரிய அச்சுறுத்தலாகப் பார்க்கப்படுகின்றது. இவ் அமைப்புக்களின் செல்வாக்கினை தற்போது மிக அதிகமாகக் காண முடியாவிடினும்கூட, இலங்கையில் இந்தியாவின் ஆதிக்கம் அதிகரித்துவருவதால் அத்தகைய செல்வாக்கு எதிர்காலத்தில் அதிகரிக்கலாம் என பதிலிறுப்பவர்கள் கருதுகின்றனர்.

- **துஷ்பிரயோகமான மொழிப் பிரயோகம் மற்றும் வெறுப்பு பேச்சு**

இக் கற்கையில் இந்து சமுதயாத்தினருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பிரதான நிந்தனைகளுள் ஒன்று இந்து மதக் கொண்டாட்டங்களின்போது எழுப்பப்படுகின்ற சத்தமாகும். மட்டக்களப்பினைச் சேர்ந்த ஒருவர் பதிலிறுக்கின்றபோது, கோவில் விழாக்களில் வழிபாட்டின்போது அதிகளவான சத்தங்களை எழுப்புவதற்காகவே பெரும்பாலும் இந்து சமுதாயத்தினர் குற்றம் சாட்டப்படுகின்றனர் என கூறினார். புத்தளத்திலுள்ள முஸ்லிம்கள் அத்தகைய உரத்த சத்தம் தொடர்பாக மூன்று தடவைகள் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளதாக மற்றுமொர பதிலிறுப்பவர் கூறினார். இந்து சமுதாயத்தின் சில உறுப்பினர்கள் இச்சூழ்நிலையினை அவர்களுடைய மத சுதந்திரத்திற்கான அச்சுறுத்தலாகக் கருதுகின்றார்கள் என்பதுடன் ஏனைய மத சமுதாயங்களுடன் ஒப்பிட்டு பார்க்கின்றபோது இந்து மத குழுவினரால் ஏற்படுத்தப்படுகின்ற ஒலி மாசடைவு குறைவானதே என அவர்கள் கூறுகின்றனர்.

மத்திய மாகாணத்தில் வாழ்கின்ற மலையக தமிழ் சமுதாயத்தினர் மத அடையாளத்தின் அடிப்படையில் வெறுப்பு பேச்சிற்கு ஆளாவதாக அறிக்கையிடப்பட்டது. மத்திய மாகாணத்தைச்

[75] இந்துத்துவ அமைப்பானது அதனை ஒரு வலதுசாரி அமைப்பாகக் காட்டிக் கொள்கின்ற அதேவேளை அது ஒரே பெரும்பான்மை மற்றும் கலாசார இறைமை போன்ற கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டுள்ளது. இந்திய கலாசாரமானது இந்துக்களின் பெறுமதிகளினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என கூறுவதுடன் மத சார்பற்ற கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகளை இது வெகுவாக எதிர்க்கிறது. சில பகுப்பாய்வாளர்களின் கருத்துப்படி, இந்துத்துவம் என்பது 'அடிப்படைவாத தீவிர பழமைவாதம்' அல்லது 'வகுப்புவாத முழுமைத்துவம்' ஆகும்.

சேர்ந்த ஒருவர் பின்வருமாறு கூறினார்:

> "சிவலிங்கத்தினை பாலில் குளிப்பாட்டுகின்ற இந்து வழக்காற்றினை சிங்களவர்கள் கேலிக்குள்ளாக்குகின்றனர். அது மட்டுமல்லாது தீமிதித்தல் மற்றும் அலகு குத்துதல் போன்ற ஏனைய மத சடங்குகளையும் அவர்கள் வெறுப்புடன் நோக்குகின்றார்கள்."

ஆகவே, இந்துக்கள் தங்களுடைய மத சடங்குகளில் ஈடுபடுகின்றபோது அவர்கள் வெறுப்பு பேச்சிற்கு ஆளாகின்றனர் என்பது நிரூபணமாகின்றது.

- **புதிய மத வழிபாட்டிடங்களை ஆரம்பிப்பதற்கான தடைகள்**

மட்டக்களப்பு மற்றும் புத்தளம் மாவட்டதைச் சேர்ந்தோரிடம் நடத்தப்பட்ட நேர்காணல்கள் ஆலயங்களைக் கட்டுவதற்காக அரசாங்கத்திடமிருந்து நிலங்களைப் பெற்றுக் கொள்கின்ற செயன்முறை மிகவும் கடினமானதாக உள்ளதென தெரிவிக்கின்றன. இதன் காரணமாக, இந்து சமுதாயத்தினர் பெரும்பாலும் தனிப்பட்ட காணிகளிலே ஆலயங்களைக் கட்டுவதாக பதிலிறுப்பவர்கள் கூறினார்கள். பதிலிறுத்தவர்கள் இதனை இந்து மதக் குழுவினரின் மத சுதந்திரத்திற்கானத் தடையாகவும் அவர்களுடைய மதத்தினை பின்பற்றுவதற்கானத் தடையாகவும் பார்க்கின்றார்கள். இந்து சமுதாயம் மீதான அரசாங்கத்தின் கவனம் தொடர்பாகப் பார்க்கின்றபோது மலையக தமிழ் சமுதாயத்தினர் தாம் அதிகளவில் ஓரங்கட்டப்பட்டிருப்பதாக நம்புகின்றனர். இந்து மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற நிதி ஏற்பாடுகளை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற இந்துக்களே பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றதென மலையக தமிழ் சமுதாயத்தைச் சேர்ந்த பதிலிறுப்பவர்கள் நம்புகின்றனர்.

**மத சுதந்திரம் மற்றும் இந்து பெண்கள்**

முஸ்லிம் சமுதாயத்தைப் போன்றே இந்து சமுதாயத்திலும் பெண்களுடைய மத சுதந்திரம் இரு வழிகளில் சவாலுக்கு உட்பட்டிருப்பதாக நேர்காணல்கள் வெளிப்படுத்துகின்றன. அவ்விரு வகைகளுமாவன: வெளி சமூகத்தினரால் இந்து பெண்கள் எதிர்கொள்கின்ற சவால்கள் மற்றும் தங்களுடைய சொந்த மத சமுதாயத்திற்குள் இந்து பெண்கள் எதிர்கொள்கின்ற சவால்கள். வெளி சமூகத்தினால் ஏற்படுத்தப்படுகின்ற சவால்களுள் முதன்மையானது பெண்கள் மத மாற்றத்திற்கான இலகுவழி இலக்குகளாக ஆகின்றமையே ஆகும். இது தொடர்பாகப் பதிலிறுத்த பதிலளிப்பவர்கள் யுத்தத்திற்கு பின்னர் இடம்பெயர்ந்த, யுத்தத்தினால் கணவனை இழந்த பல பெண்கள் மத மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளார்கள். யுத்தத்தினால் கணவனை இழந்த பெண்களை மத மாற்றத்தை நோக்கி வழிநடத்தியிருக்கக்கூடிய இரு காரணிகள் இக்கலந்துரையாடல்களின்போது அடையாளம் காணப்பட்டன. அவற்றுள் ஒன்று யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் யுத்தத்தினால் கணவனை இழந்த பெண்களினால் எதிர் கொள்ளப்பட்ட பொருளாதார சிக்கல்களிலிருந்து விடுபட்டு தஞ்சம் புகுவதற்கான வழிமுறையொன்றாக அவர்கள் கிறிஸ்தவ பிரிவுகளைப் பின்பற்றுவதற்கு தன்னார்வமாகத்

தீர்மானித்தார்கள். மற்றறையது யுத்தத்தினால் கணவனை இழந்த பெண்கள் யுத்தத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியில் எதிர் கொண்ட பாலியல் துஷ்பிரயோகங்களை எதிர்கொள்வதற்கான பலம் கிறிஸ்தவ பிரிவுகளில் இணைந்து கொள்வதன் மூலமாகத் தமக்கு கிடைக்குமென அவர்கள் நம்பினார்கள்.

அத்துடன் இந்து பெண்களின் மத சுதந்திரம் அவர்களுடைய மதக் குழுவினராலேயே சவாலுக்குட்படுத்தப்படுகின்ற சந்தரப்பங்கள் இக்கற்கையில் அறிக்கையிடப்பட்டன. வேறு சொற்களில் கூறுவதாயின், இந்து மதத்தில் பெண்களுடைய நிலை ஆண்களுக்கு அடுத்ததாக (இரண்டாம் நிலை) காணப்படுவதாகவும் அவர்களுடைய மத சமுதாயத்திற்குள் மற்றும் வெளியே பெண்கள் முக்கியமற்றவர்கள் என்றரீதியில் நடத்தப்படுவதாகவும் நேர்காணல்கள் வெளிப்படுத்தின. இந்து மதத்தில் காணப்படுகின்ற தந்தைவழி ஆதிக்கமானது பெண்களின் மாதவிடாய் அல்லது கர்ப்ப காலங்களின்போது மத நடவடிக்கைகள் மற்றும் சடங்குகளில் முழுமையாகப் பங்குபற்றுவதற்கான அவர்களின் இயலுமையினைப் பாதிக்கின்றது என பதிலிறுப்பவர்கள் கூறினார்கள். குறித்து கொள்ளத்தக்க மற்றுமொரு விடயம் யாதெனில் கணவனை இழந்த பெண்கள் மற்றம் குழந்தைபேறற்ற பெண்கள் ‘அதிஷ்டமில்லாத பெண்களாகக்’ கருதப்படுவதுடன் அவர்களுடைய மத சுதந்திரம் மிக அதிகமாக சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு பெண்ணினதும் சாதியும் இம்மீறல்களுக்கான அடிப்படையாக இருந்து வருகின்றது என்ற விடயமும் குறிப்பிடப்பட்டது.

இந்து சமுதாயமானது தற்போது மத சுதந்திரம் தொடர்பாக எதிர்கொள்கின்ற சவால்கள் குறித்து கரிசனைக் கொள்கின்ற அதேவேளை எதிர்காலத்தில் மத சுதந்திரம் தொடர்பாக உருவாகக்கூடிய சவால்கள் குறித்தும் கரிசனைக் கொள்கின்ற மத சமுதாயமொன்றாகக் காணப்படுகின்றது. அவர்களுடைய நடைமுறை தொடர்பாகக் காணப்படுகின்ற தடைகளுள், மத மாற்றத்தினை அவர்கள் பிரதானமான சவாலாக அடையாளங் காண்பதுடன் இது அவர்களது சமுதாயத்தினை மழுங்கடித்து வருகின்றது என்றும் கூறுகின்றார்கள். மத மாற்றமானது இலங்கையிலுள்ள இந்து சமுதாயத்தினை அது விசேடித்த தனியான மத குழு என்றரீதியில் சவாலுக்குட்படுத்துகின்றது. நீண்ட காலம் செல்கின்றபோது இச் சவால் மத விடயமொன்று என்பதனையும் தாண்டி அரசியல் அதிகாரம் தொடர்பான விடயமொன்றாகலாம் என்பதனை இக்கற்கை காட்டி நிற்கின்றது. உதாரணமாக, இந்துக்களின் எண்ணிக்கையில் ஏற்படுகின்ற வீழ்ச்சி, இந்து பிரதேசங்களில் சிங்கள குடியேற்றங்கள், கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பரவியுள்ளமை மற்றும் குறைந்தளவான அரசியல் பிரதநிதித்துவம் போன்ற காரணங்களினால் அரசியல் பேரம் பேசும் அதிகாரம் மிகக் குறைந்தளவில் காணப்படுகின்ற சமுதாயமொன்றாக மாறிவிடுவோமென இந்து சமுதாயம் கவலையுறுகின்றது. இறுதியாக, மத சுதந்திரம் தொடர்பான இந்து மத சமுதாயத்தினரின் பிரச்சினைகள் தமிழின பிரச்சினை மற்றும் பாரதீனப்படுத்தப்பட முடியாத அரசியல் அதிகாரம் தொடர்பான பிரச்சினை ஆகியவற்றுடன் தொடர்புற்றுள்ளது.

## பரிந்துரைகள்

இலங்கையில் மத சுதந்திரத்தினை தாபிக்க எண்ணுகின்ற திறத்தவர்களுக்கான சில பரிந்துரைகளை இவ் அத்தியாயம் வழங்குகின்றது. இவற்றுள் சில பரிந்துரைகள் அரச மட்ட தலையீடுகளுடன் செய்யப்பட வேண்டியவையாக இருக்கின்றபோதிலும், சில மதத் தலைவர்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் விடயப் பொருள் தொடர்பான ஆர்வமுள்ள வேறு நபர்கள் உள்ளடங்கலாக சமூகத்திலுள்ள வேறுபட்ட குழுக்களினால் அமல்படுத்தப்படக்கூடியனவாகக் காணப்படுகின்றன. இவற்றுள் சில குறுகிய காலத்தில் அமுல்படுத்தப்படக்கூடிய பரிந்துரைகளாக இருக்கின்ற அதேவேளை, ஏனையவை இடைக்கால அல்லது நீண்டகால தலையீடுகளைத் தேவைப்படுத்துகின்றன.

- மத சுதந்திரம் தொடர்பான தலையீடுகள் தேசிய மட்டத்தில் மத சுதந்திரம் தொடர்பாக உள்ள பிரச்சினைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது அவை பிராந்திய மட்டத்தில் உள்ள நடைமுறை யதார்த்தங்களையும் கருத்திற் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். இக் கற்கையில் கண்டறியப்பட்ட விடயங்களுள் மிகவும் முக்கியமான விடயமொன்றாக தேசிய மட்டத்தில் அதிக ஈர்ப்பினைப் பெற்றுள்ள முஸ்லிம்களுக்கு எதிரான செயல்களுக்கு அப்பால், பிராந்திய மட்டத்தில் கிறிஸ்தவர்கள் மற்றும் இந்துக்களும் மத சுதந்திரம் தொடர்பான பல்வேறுபட்ட சவால்களை எதிர் கொண்டிருந்தனர். எவ்வாறெனினும், தேசிய மட்டத்தில் மத சுதந்திரம் தொடர்பாக இடம்பெற்ற அண்மைக் கால கலந்துரையாடல்களில் கிறிஸ்தவர்கள் மற்றும் இந்துக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் முஸ்லிம்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளைப் போல அதிக கவனத்தை ஈர்த்திருக்கவில்லை.
- மதக் குழுவொன்றின் மத சுதந்திரம் தொடர்பாகச் செய்யப்படுகின்ற எந்தவொரு தலையீட்டிலும், அம்மதத்தினைப் பின்பற்றுகின்ற அனைவரும் ஒரே பிரிவிற்குள் குழுமமாக்கப்படுதல் கூடாது. குறிப்பிட்ட மதக் குழுவினைச் சேர்ந்த நபர்கள் வேறுபட்ட புவியியல், சமூக, கலாசார மற்றும் பொருளாதார காரணிகளினால் வேறுபட்ட சவால்களை எதிர்கொள்ளக்கூடும். உதாரணமாக, இந்து சமுதாயத்தினரால் எதிர்கொள்ளப்படுகின்ற சவால்கள் அவர்கள் வாழ்கின்ற புவியியல் சூழலுடன் தொடர்புறுகின்ற பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார காரணிகளுக்கு அமைய மாறுபடுகின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள இந்துக்கள் சிவ சேனா அமைப்பு பற்றி கூறிய விடயங்களை கிழக்கு மாகாணம் மற்றும் மத்திய மாகாணங்களில் வாழ்கின்ற இந்துக்கள் அது பற்றி கூறிய விடயங்களோடு ஒப்பிட்டு பார்க்கின்றபோது பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. மேலும், இந்துக்களின் மத மாற்றம் தொடர்பான விடயங்களும் சாதி மற்றும் சமூக வகுப்பு என்பவற்றுக்கேற்ப வேறுபடுவதாக இக்கற்கை வெளிப்படுத்துகின்றது. மேலும், கிறிஸ்தவ சமுதாயத்தினைச் சேர்ந்த நபர்கள் மத சுதந்திரம் தொடர்பாக எதிர்கொள்கின்ற சவால்கள் அவர்களுடைய பிரிவுகளுக்கேற்ப வேறுபட்டு காணப்படுவதும் நிரூபணமாகியுள்ளது. குணப்படுத்தல் பணிகள் தொடர்பாக தேவாலயங்களுக்கிடையே இணக்கமில்லை என்பதும் தேவாலயங்கள் குணப்படுத்தல் செயன்முறையினை முன்னெடுக்கின்ற வழிவகைகளுக்கேற்ப அவர்கள் எதிர்கொள்கின்ற சவால்கள் வேறுபடுகின்றன என்பதும் தெளிவு.

- மத சுதந்திரம் அச்சுறுத்தலுக்குள்ளாகின்றபோதே பெரும்பாலும் மத சுதந்திரம் தொடர்பான கலந்துரையாடல்கள் தோற்றம் பெறுகின்றன. ஆகவே, தேசிய மட்ட அணுகுமுறைகளுக்கு மேலதிகமாக, ஒவ்வொரு சம்பவத்தினையும் தனிப்பட்ட முறையில் ஆராய்ந்து அது பிராந்திய மட்டத்தில் தோற்றுவிக்கக்கூடிய சவால்களுக்கு பொருத்தமான தீர்வுகளை முன்மொழிகின்ற பொறிமுறையொன்றினைத் தாபிப்பதனூடாக மத சுதந்திரத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளை அர்த்தமுள்ளரீதியில் தீர்க்க இயலும்.

- இலங்கையில் மத சுதந்திரம் தொடர்பான தலையீடுகளை மேற்கொள்கின்றபோது மத மாற்றம் தொடர்பான பிரச்சினையில் கவனம் செலுத்த வேண்டியது இன்றியமையாததாகும். மத மாற்றம் தொடர்பான உறுதியான குற்றச்சாட்டுக்கள் மத சமுதாயங்களை நோக்கி எறியப்படுகின்றன. இதற்கான எதிர்வாதக் கருத்தாக அமைவது ஒருவருடைய மதத்தினை மாற்றிக் கொள்வதற்கான உரிமையானது மத சுதந்திரத்திற்கான மீறலொன்று என்பதனை விட அது மத சுதந்திரத்தினை உத்தரவாதப்படுத்துவதாகும். இவ்விரண்டு சித்தாந்தங்களுக்குமிடையிலான முரண்பாடு முறையற்ற மத மாற்றம் தொடர்பான கலந்துரையாடலுக்கு வழி சமைத்துள்ளது. எவ்வாறெனினும், முறையற்ற மத மாற்றம் என்பதனை வரையறுத்தல் இலகுவான காரியமொன்றல்ல. உதாரணமாக, கிறிஸ்தவ அமைப்புக்கள் யுத்தத்தில் கணவனை இழந்த பெண்கள் மீது காட்டிய பராமரிப்பு அக்கறை அப்பெண்கள் தாமாகவே தங்களுடைய மதத்தினை மாற்றிக் கொள்வதற்கு அவர்களைத் தூண்டியது. இதற்கான எதிர்வாதம், கிறிஸ்தவ தேவாலயங்கள் ஓரங்கட்டப்பட்ட சமுதாயங்களை இலக்கு வைக்கின்றன- ஏனெனில் அச்சமுதாயங்களில் மத மாற்றத்தினை மேற்கொள்வதற்கான வாய்ப்பு உள்ளது என்பதாகும். இப்பின்னணியில், மத மாற்றமானது மதக் குழுக்களுக்கிடையில் பதட்டம் ஏற்படுவதற்கான காரணமொன்றாகக் காணப்படுகின்றது. இருப்பினும், இவ்விடயத்தின் சிக்கல் தன்மையானது இப்பிரச்சினை குறித்த தீர்வொன்றினை அடைய வேண்டிய தேவையின் அவசியத்தை எவ்வழியிலும் குறைக்காது.

- குறிப்பிட்ட சில மத குழுக்களினால் மத சுதந்திரம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட குற்றச் சாட்டுக்கள் எந்தவொரு குறித்த மத நம்பிக்கையினையும் குறிப்பிடுவதற்கு மாறாக குறிப்பிட்ட சில தனிப்பட்ட மதகுருமாரின் மத நடைமுறைகளையே குற்றம் சாட்டியிருந்தன. இம்முறைமைகளுடன் உடன்படாத அதே மதக் குழுவினைச் சேர்ந்த ஏனைய மதகுருக்கள் சில நபர்கள் செய்கின்ற தவறுகளின் விளைவுகளை அவர்களும் அனுபவிக்க வேண்டியுள்ளது என குறிப்பிட்டனர். உதாரணமாக, கிறிஸ்தவ தேவாலயத்திலுள்ள போதகர் ஒருவர் கிறிஸ்தவ கோட்பாட்டினை முறையாக புரிந்து கொள்ளாது அது பற்றி போதனைகளை செய்ததனூடாக இந்து மக்களிடையே கிறிஸ்தவ தேவாலயங்கள் தொடர்பான தவறான புரிதலை ஏற்படுத்தியுள்ளார். அத்துடன் குறிப்பிட்ட சில போதகர்கள் தங்களுடைய மத நம்பிக்கை மாத்திரமே உலகிலுள்ள ஒரேயொரு மத நம்பிக்கை என்ற உறுதியான எண்ணத்துடன் மதப் பரப்புரைகளைச் செய்கின்றமையினாலேயே இப்பதட்டங்கள் தோன்றுகின்றன என அப்போதகர் குறிப்பிட்டிருந்தார். ஆகவே, மதக் குழுக்களுக்கான குறைந்தபட்ச தரநியமங்களைப் பேணுதலானது தனிநபர் நடவடிக்கைகளினூடாகத் தங்களுடைய சொந்த மத குழுவிற்கும் ஏனைய மதக் குழுக்களுக்கும் ஊறு ஏற்படுவதனை குறைப்பதற்கு உதவும்.

- மத சுதந்திரம் தொடர்பான சவால்களை எதிர்கொண்ட சில மதக்குழுக்கள் அத்தகைய சவால்கள் ஏனைய மதக் குழுக்களின் அறியாமையின் விளைவாகும் என குறிப்பிட்டிருந்தன. உதாரணமாக, முஸ்லிம்களுடைய மத நடைமுறைகளை அறிந்திராத காரணத்தினாலேயே ஏனைய மதக் குழுக்கள் முஸ்லிம் மத சமுதாயத்தினரை சந்தேகக் கண் கொண்டும் அச்சுறுத்துகின்ற வகையிலும் பார்ப்பதாக இக் கற்கையில் அறிக்கையிடப்பட்டிருந்தது. இத்தகைய அறியாமையினைப் பயன்படுத்திக் கொள்கின்ற சில அடிப்படைவாதக் குழுக்கள் முஸ்லிம்கள் பற்றி தவறான பிரச்சாரங்களை மேற்கொள்கின்றனர் என நேர்காணல்களில் குறிப்பிடப்பட்டது. ஏனைய மதக் குழுக்களின் அறியாமை காரணமாக அவர்களும் அத்தகைய பொய்யான பிரச்சாரங்களினால் தவறாக வழிநடத்தப்படுகின்றனர். ஆகவே, ஒவ்வொரு மதக் குழுவிற்கும் பாடசாலை மட்டத்திலிருந்தே ஏனைய மதக் குழுக்களின் மத வழக்காறுகள் தொடர்பான சரியான அறிவினை வழங்குதல் இன்றியமையாததாகும்.

- ஒவ்வொரு மதக்குழுவும் ஏனைய மதக்குழுவின் மத வழிபாட்டிடங்களில் ஏற்படும் ஒலி குறித்து குற்றம் சாட்டுகின்றன. பெரும்பாலும் ஒலிப்பெருக்கிகளின் பாவனை குறித்த குற்றச்சாட்டுக்களே மேற்கொள்ளப்படுகின்றன. அதிகமான சத்தம் தொடர்பாக முறைப்பாடு செய்கின்ற வதிவிடவாளர்கள் அதனை தங்களுடைய நாளாந்த வாழ்வின் இடையூறாகப் பார்க்கின்றனர். அத்தகைய நபர்களால் அத்தகைய குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்கின்ற மதக் குழுக்கள் அவற்றை தங்களுடைய மத சுதந்திரத்திற்கானத் தடையாகப் பார்க்கின்றார்கள். ஒவ்வொரு மதக் குழுவும் சில நேரங்களில் குற்றம் சாட்டுவதாயும் சில சமயங்களில் குற்றம் சாட்டப்படுவதாயும் காணப்படுகின்றது. ஆகவே, மத வழிபாட்டிடங்களில் பயன்படுத்தக்கூடிய சத்தங்கள் தொடர்பான குறைந்தபட்ச தரநியமங்களைத் தாபித்தல் மற்றும் அத்தகைய தரநியமங்கள் நடைமுறையில் பின்பற்றப்படுகின்றன என்பதனை உறுதி செய்தல் என்பன மத சுதந்திரம் தொடர்பாக முன்னெடுக்க வேண்டிய இன்றியமையாத விடயங்களாகும்.

- மத சுதந்திரத்தினை மேம்படுத்துவதற்கு திட்டமிடுகின்றபோது அதனை ஆன்மீகம்சார்ந்த விடயமாக மாத்திரம் கருதாது அதனை அரசியல் விடயமொன்றாகவும் கருதுதல் அவசியமாகும். உதாரணமாக, முஸ்லிம்களின் மத சுதந்திரத்திற்கான தடைகளானவை ஏனைய மதக் குழுக்களின் ஆன்மீக நம்பிக்கைகளினால் அல்லாமல் பெரும்பாலும் அரசியல் அக்கறைகளினாலேயே ஏற்படுத்தப்படுகின்றன என்பது இக்கற்கையில் அவதானிக்கப்பட்டது. அத்துடன், வட மாகாணத்திலுள்ள இந்துக்களின் மத சுதந்திரத்திற்கான சவால்கள் தெற்கு மற்றும் இந்தியாவிலுள்ள அரசியல் அக்கறைகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவை என்பதனையும் இக்கற்கை குறிப்பிடுகின்றது. நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியில், மத சுதந்திரம் மீதான அரசியல் செல்வாக்கு மேலும் அதிகரிக்கலாம். ஆகவே, மத சுதந்திரம் தொடர்பாகச் செயற்படுகின்ற நிறுவனங்கள் மத சுதந்திரம் மீதான அரசியலின் செல்வாக்கினைக் கருத்திற் கொள்ள வேண்டியது இன்றியமையாதது ஆகும்.


- திறந்த சந்தை பொருளாதார முறைமையில் காணப்படுகின்ற போட்டித்தன்மையானது மத சுதந்திரத்தினையும், அதேபோல அரசியலையும் சவாலுக்குட்படுத்துகின்ற மற்றொரு விடயமாகும். இக்கற்கையில் மதம் வியாபார வெற்றிக்காகப் பயன்படுத்தப்படுகின்றமை

நிரூபணமாகியிருந்தது. ஆகவே, தங்களுடைய இலாபங்களை அதிகரித்துக் கொள்வதற்காக அத்தகைய நெறிமுறையற்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நிறுவனங்களுக்கு எதிரான பொது அபிப்பிராயமொன்றைக் கட்டியெழுப்புதல் அத்தகைய அக்கறைகளினால் சவால்களை எதிர்கொள்கின்ற மத சமுதாயங்களின் மத சுதந்திரத்தினை தாபிப்பதற்கு இன்றியமையாததாகும்.


- மேற்சொல்லப்பட்ட பரிந்துரைகளுக்கு மேலதிகமாக, இக்கற்கையில் மத சுதந்திரத்திற்கான தடைகளாக அடையாளம் காணப்பட்ட குறிப்பிட்ட சில சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை மாற்றுதல் மற்றும் புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை ஆக்குதல் என்பனவும் மத சுதந்திரத்தைத் தாபிப்பதற்கு அவசியமாகும். அவற்றுள் பிரதானமானது பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தினால் குறிப்பிட்ட மத சமுதாயங்களுக்கு ஏற்படக்கூடிய சாத்தியமான ஊறினை நீக்குதல், புதிய வழிபாட்டிடங்களைக் கட்டுதல் தொடர்பான 2008 ஆம் ஆண்டு சுற்றுநிரூபத்தினை முறைகேடாகப் பயன்படுத்துவதற்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் மற்றும் ஒரே நாடு- ஒரே சட்டம் என்ற செயலணியின் பக்கச்சார்புகளை இல்லாதொழித்தல், மதமாற்றம் தொடர்பான சட்டமூலத்தினை வரைகின்றபோது அனைத்து மதக்குழுக்களையும் கலந்துரையாடுதல் மற்றும் வெறுப்பு பேச்சு தொடர்பாகக் காணப்படுகின்ற சட்ட ஏற்பாடுகளை நடைமுறையில் அமுல்படுத்தல் என்பன பிரதானமானவையாகும்.
- இறுதியாக, தங்களுடைய மத சுதந்திரம் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்ட பல மதக் குழுக்களினால் சொல்லப்பட்டதற்கமைய, ஏனைய மதக்குழுக்களின் உரிமைகள் அரசின் பெரும்பான்மை மதத்திற்கு சார்பானமுறையில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்பதனை குறிப்பிட வேண்டும். இதனை மாற்றுவதற்கான தலையீடுகள் குறுகிய அல்லது இடைக்கால நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட முடியாதனவாயிருக்கின்ற அதேவேளை, அத்தகைய எந்தவொரு தலையீடும் இலங்கை அரசின் தன்மை எத்தகையதாக இருக்க வேண்டும் என்பது தொடர்பான கலந்துரையாடலினூடாகத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அவை, அரசியலமைப்பினூடாக செய்யப்படுகின்ற திருத்தங்கள், அரசாங்க நிறுவனங்களின் சில நடைமுறைகளில் செய்யப்படுகின்ற மாற்றங்கள், கல்வி முறைமை வடிவமைக்கப்பட்டுள்ள முறையில் செய்யப்படுகின்ற மாற்றங்கள் மற்றும் ஊடக பாவனையில் செய்யப்படுகின்ற மாற்றங்கள் என்பனவற்றை உள்ளடக்கலாம்.

# பின்னிணைப்புகள்


பின்வரும் வரைபுகள் தேசிய சமாதானப் பேரவையினால் *2018* ஆம் ஆண்டு செய்யப்பட்ட மதச் சுதந்திரம் தொடர்பான குறிகாட்டி மதிப்பீட்டிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.





**படம் *1:* பொதுவாக உங்களுடைய நாட்டில் எந்த அளவான சுதந்திரத்துடன் உங்களுடைய மதச் செயற்பாடுகளில் ஈடுபட முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**





**உரு *2-* பொதுவாக உங்களுடைய நாட்டில் எந்த அளவான சுதந்திரத்துடன் உங்களுடைய மதச் செயற்பாடுகளில் ஈடுபட முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? (மத அடிப்படையில்)**





**உரு 3: உங்களுடைய பிரதேசத்தில் எந்த அளவான சுதந்திரத்துடன் உங்களுடைய மதம் பின்பற்றப்படக்கூடியதாக உள்ளது? (மத அடிப்படையில்)**



***உரு 4: சமகால விவகாரங்கள் பற்றிய மதக் கலாசார பாதுகாப்பின்மை***




***உரு 5: முறையற்ற மத மாற்றங்கள் தொடர்பாகக் கரிசனையுற்ற மதக் குழுக்கள்***




***உரு 6: எதிர்காலத்தில் தங்களுடைய சமுதாய உறுப்பினர்கள் அதிகரித்தவகையில் முறையற்ற மத மாற்றத்திற்கு உட்படுவார்கள் என கரிசனைக் கொண்ட மதக் குழுக்கள்***

| | பௌத்தர்கள் | இந்துக்கள் | முஸ்லிம்கள் | கத்தோலிக்கர்கள் | கிறிஸ்தவர்கள் |
|---|---|---|---|---|---|
| தற்கால சூழ்நிலை பற்றி கவலையில்லை | 46.2% | 49.4% | 78.2% | 43.9% | 53.4% |
| தற்கால சூழ்நிலை பற்றி சிறிய அளவில் கவலை | 46.2% | 36.5% | 18.4% | 46.6% | 36.5% |
| தற்கால சூழ்நிலை பற்றி அதிகளவில் கவலை | 7.6% | 14.1% | 3.4% | 9.5% | 10.1% |
| அடிப்படை | 197 | 156 | 174 | 148 | 148 |

*அட்டவணை 1: மதக் கலாசார பாதுகாப்பின்மை பற்றிய சமகால விவகாரங்கள் (மத அடிப்படையில்)*

| | | உடன்படுகிறேன் | உடன்படவில்லை | தெரியாது | அடிப்படை |
|---|---|---|---|---|---|
| எனது மதத்தைச் சேர்ந்த நபர்கள் இந்தப் பிரதேசத்திலிருந்து / நகரத்திலிருந்து வெளியேறக்கூடும் | பௌத்தர் | 12.2% | 87.3% | .5% | 197 |
| | இந்து | 14.1% | 71.2% | 14.7% | 156 |
| | முஸ்லிம் | 4.0% | 89.1% | 6.9% | 174 |
| | கத்தோலிக்கர் | 10.8% | 79.1% | 10.1% | 148 |
| | கிறிஸ்தவர் | 7.4% | 83.1% | 9.5% | 148 |
| எனது மதக் குழுவினர் படிப்படியாக மற்றவர்களுடைய மதத்திற்கு மாறுவார்கள் | பௌத்தர் | 30.5% | 61.9% | 7.6% | 197 |
| | இந்து | 28.8% | 59.0% | 12.2% | 156 |
| | முஸ்லிம் | 2.9% | 93.7% | 3.4% | 174 |
| | கத்தோலிக்கர் | 21.6% | 67.6% | 10.8% | 148 |
| | கிறிஸ்தவர் | 12.8% | 76.4% | 10.8% | 148 |
| எனது மதக் குழுவினர் அவர்களுடைய கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்த முடியாதவர்களாக இருப்பார்கள் | பௌத்தர் | 13.2% | 83.8% | 3.0% | 197 |
| | இந்து | 23.7% | 61.5% | 14.7% | 156 |
| | முஸ்லிம் | 10.3% | 80.5% | 9.2% | 174 |
| | கத்தோலிக்கர் | 8.8% | 77.7% | 13.5% | 148 |
| | கிறிஸ்தவர் | 18.2% | 67.6% | 14.2% | 148 |
| எனது மதக் குழுவில் இருக்கும் நபர்கள் அவர்களுடைய மதத்தை சுதந்திரமாகப் பின்பற்றமுடியாதிருக்கும் | பௌத்தர் | 13.2% | 84.3% | 2.5% | 197 |
| | இந்து | 20.5% | 64.7% | 14.7% | 156 |
| | முஸ்லிம் | 12.6% | 75.9% | 11.5% | 174 |
| | கத்தோலிக்கர் | 6.8% | 79.7% | 13.5% | 148 |
| | கிறிஸ்தவர் | 18.2% | 70.9% | 10.8% | 148 |
| இந்தப் பிரதேசத்தில் இருக்கும் ஏனைய மதக் குழுக்களைச் சேர்ந்த மக்கள் எதிர்காலத்தில் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். | பௌத்தர் | 29.4% | 54.8% | 15.7% | 197 |
| | இந்து | 25.0% | 45.5% | 29.5% | 156 |
| | முஸ்லிம் | 14.9% | 66.7% | 18.4% | 174 |
| | கத்தோலிக்கர் | 19.6% | 56.1% | 24.3% | 148 |
| | கிறிஸ்தவர் | 20.3% | 54.7% | 25.0% | 148 |
| இந்த பிரதேசத்திலிருக்கும் எனது மதக் குழுவினைச் சேர்ந்த நபர்கள் இது தொடர்பான சட்டம் மற்றும் சட்ட அதிகாரிகளிடதிருந்து நியாயமான நடத்துகையினைப் பெற்றுக் கொள்ள மாட்டார்கள். | பௌத்தர் | 14.7% | 80.2% | 5.1% | 197 |
| | இந்து | 33.3% | 42.3% | 24.4% | 156 |
| | முஸ்லிம் | 23.0% | 64.4% | 12.6% | 174 |
| | கத்தோலிக்கர் | 13.5% | 75.0% | 11.5% | 148 |
| | கிறிஸ்தவர் | 20.3% | 66.9% | 12.8% | 148 |
| இந்த பிரதேசத்தில் இருக்கும் எனது மதக் குழுவினைச் சேர்ந்த மக்கள் தேசியமட்ட அரசியல் வாதிகளினுடைய கவனத்தை ஈர்த்துக்கொள்ள மாட்டார்கள். | பௌத்தர் | 16.8% | 77.7% | 5.6% | 197 |
| | இந்து | 33.3% | 41.7% | 25.0% | 156 |
| | முஸ்லிம் | 22.4% | 62.1% | 15.5% | 174 |
| | கத்தோலிக்கர் | 20.3% | 58.8% | 20.9% | 148 |
| | கிறிஸ்தவர் | 21.6% | 58.1% | 20.3% | 148 |

**அட்டவணை 2: எதிர்கால மத மற்றும் கலாசார பாதுகாப்பின்மை பற்றிய எண்ணம் (மத அடிப்படையில்)**

#MINORMATTERS